REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 மார்ச் 15 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

வரு. 92 இல. 65 | Friday 15, March, 2024 | 20 பக்கங்கள் | 50/-

### அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு
## இரண்டாம் கட்ட விண்ணப்பங்கள் ஏற்கும் திகதி மார்ச் 22 வரை நீடிப்பு
**இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவிப்பு**



அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுக்கான இரண்டாம் கட்ட விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் திகதி இம் மாதம் 22 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

(விரிவான செய்தி 03ஆம் பக்கம்)

### தற்போதைய பொருளாதார நிலைமையில்
# நிர்மாணத்துறை பிரச்சினைகளுக்கு தீர்வுகளை கண்டறிய நிபுணர் குழு



**நிதி, நகர அபிவிருத்தி, வீடமைப்பு அமைச்சுக்களின் செயலாளர்களை உள்ளடக்கியதாக துறைசார் நிபுணர்களை கொண்ட குழுவாக இக் குழு இருக்குமென்றும் ஜனாதிபதி தெரிவிப்பு**

நிர்மாணத்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை உரிய முறையில் ஆராய்ந்து தற்போதைய பொருளாதார நிலைமையில் இப்பிரச்சினைகளுக்கு வழங்கக்கூடிய தீர்வுகளைக் கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்க நிபுணர் குழுவொன்றை நியமிக்க இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். நிர்மாணத் துறையிலுள்ள கைத்தொழில்துறையினருடன் ஜனாதிபதி செயலகத்தில் (13) நடைபெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

நிதி அமைச்சு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு என்பவற்றின் செயலாளர்களை உள்ளடக்கி, துறைசார் நிபுணர்களைக் கொண்ட இந்த நிபுணர் குழுவை நியமிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கடன் மறுசீரமைப்பு பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், அடுத்த வருடத்திற்குள் அனைத்து துறைகளிலும் உள்ள கைத்தொழில்துறையினருக்கு நிவாரணம் வழங்கி ஊக்கமளிக்க எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் தடைப்பட்ட திட்டங்களை மீள ஆரம்பிப்பது, முதலீட்டுக்கு உகந்த சூழலை உருவாக்குதல், நிர்மாணச் சேவைகளை மேம்படுத்துதல் போன்றவற்றின் அடிப்படையில் பாரிய, சிறிய 06

## "மக்கள் போராட்டத்தின் எதிரொலி" நூல் ஜனாதிபதியிடம் கையளிப்பு



நாரஹேன்பிட்டி அபயாராமாதிபதி, மேல்மாகாண பிரதம சங்கநாயக்க தேரரும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தருமான வண. கலாநிதி முருத்தெட்டுவே ஆனந்த தேரரால் எழுதப்பட்ட "மக்கள் போராட்டத்தின் எதிரொலிகள்" (ஜனஅரகலயே தோங்காரய) எனும் 06

## நெல் கொள்வனவுக்கு ரூ. 50 கோடி; ஜனாதிபதி பணிப்பில் நிதி ஒதுக்கீடு



நெல் கொள்வனவு நடவடிக்கைகளுக்காக 50 கோடி ரூபாவை அரசாங்கம் வழங்கும் என விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில், மேற்படி ஐம்பது கோடி ரூபாவை திறைசேரி வழங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதற்கிணங்க இன்று வெள்ளிக்கிழமை முதல் மாவட்டங்கள் தோறும் நெல் 06

### தரமற்ற ஊசி மருந்து கொள்வனவு
## கெஹெலிய உட்பட 07 பேரின் பிணை கோரிக்கை நிராகரிப்பு
**வழக்கு நிறைவடையும் வரை பிணை வழங்க முடியாதென்றும் நீதவான் தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தரமற்ற இம்யுனோக்ளோபியுலின் ஊசி மருந்து கொள்வனவு தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட ஏழு பேரின் பிணை மனு கோரிக்கையை மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் அமைச்சின் முன்னாள் செயலாளர் உள்ளிட்டோருக்கு தரமற்ற தடுப்பூசி மருந்து கொள்வனவு வழக்கு நிறைவடையும் வரை பிணை வழங்க முடியாதென்று தெரிவித்துள்ள நீதிமன்றம் அவர்களது கோரிக்கையை நிராகரித்துள்ளது.

மேற்படி வழக்கு நேற்று மாளிகாகந்த மஜிஸ்திரேட் நீதிமன்ற நீதவான் லோச்சனி அபேவிக்கிரம முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த உள்ளிட்ட 07 பேரின் பிணை நிராகரிக்கப்பட்டது. நேற்றைய தினம் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை இடம்பெற்றது. இதன் போது 06

## பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 30 நாட்களுக்குள் சம்பள உயர்வு
**நாட்சம்பளமாக ரூ. 1,700 கிடைக்கும்**

**அமைச்சர் ஜீவன் அறிவிப்பு**

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிர்வரும் 30 நாட்களுக்குள் சம்பள உயர்வு கிடைக்கும். நாட்சம்பளமாக இவர்கள் 1,700 ரூபாவை பெறமுடியுமென இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

மலையக தமிழர்கள் தமது தேசிய அடையாளத்தை சனத்தொகை கணக்கெடுப்பின்போது மலையகத் தமிழரென வெளிப்படுத்துவதற்கான ஏற்பாட்டை உள்வாங்குவதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளாரெனவும் அமைச்சர் கூறினார்.

தலவாக்கலை ஒலிரூட் தோட்டத்தில் தீயினால் பாதிக்கப்பட்டு தற்காலிக குடில்களில் வசித்த குடும்பங்களுக்கு, தனி வீடுகள், வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு 06

## ரயில் ஆசனங்கள் ஒதுக்கீடு 100 வீத Online முறை ஆரம்பம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ரயில்களுக்கான ஆசனங்கள் ஒதுக்கீடு முழுமையாக Online ஊடாக மேற்கொள்ள முடியுமென ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்கிணங்க, இப்புதிய திட்டம் நேற்று இரவு 7.00 மணி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இதுவரை 40 வீதமான ஆசனங்களே ஒன்லைன் மூலம் ஒதுக்குவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இனி முழுமையாக ஒன்லைன் மூலமே தேவையான ஆசனங்களை பதிவு செய்துகொள்ள முடியுமென்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுவரை காலமும் ஒன்லைன் மூலமாக ஆசனங்களை பதிவுசெய்த பின்னர், குறித்த ரயில் நிலையத்திற்கு பிரவேச அட்டையைப் பெற்றுக்கொள்வதற்காக பயணிகள் வருகை தர வேண்டுமென்ற நிலை காணப்பட்டது. எனினும், இனிமேல் ஆசனம் ஒதுக்கப்பட்ட பத்திரத்தின் பிரதியை தம்வசம் பயணிகள் வைத்திருப்பது போதுமானதென்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது. 06

### தலவாக்கலை ஒலிரூட் தோட்டத்தில்
## தீ விபத்தினால் வீடுகளை இழந்த 24 குடும்பங்களுக்கு புதிய வீடுகள்
**தனி வீடுகளாக அமைச்சர் ஜீவன் நேற்று கையளிப்பு**





தலவாக்கலை ஒலிரூட் தோட்டத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சகல வசதிகளுடன் கூடிய தனி வீடுகள் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் மக்கள் 06

### இலங்கை வங்கியின் புதிய தலைவர்
## காவன் ரத்நாயக்க நேற்று கடமைகள் பொறுப்பேற்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இலங்கை வங்கியின் புதிய தலைவராக காவன் ரத்நாயக்க நேற்று உத்தியோகபூர்வமாக தமது கடமைகளை பொறுப்பேற்றார்.

காவன் ரத்நாயக்க ஜனாதிபதியின் ஆளணி பிரதானியும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஆலோசகருமான முன்னாள் அமைச்சர் சாகல ரத்நாயக்கவின் சகோதரராவார். இவர், கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் இரசாயனவியல் பட்டதாரியாவார்.

நிதி அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மேற்படி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. 06

## ஆசிரிய உதவியாளர்களுக்கான நியமனங்கள் அடுத்த வாரத்தில்
**மாகாண செயலாளர் உறுதியளித்ததாக இராதாகிருஷ்ணன் எம்.பி தெரிவிப்பு**



இழுபறியிலிருந்த மத்திய மாகாண ஆசிரிய உதவியாளர்களுக்கான நியமனங்களை எதிர்வரும் (19) வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக, தமிழ் முற்போக்கு கூட்டணியின் இணைத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். 06

### உஷ்ணமான காலநிலை
## மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அறிவுறுத்தல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் தொடரும் கடும் வெப்ப நிலை காரணமாக பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பு 06

## உணவுப் பொருட்களின் விலைகள் குறைப்பு



இறக்குமதி செய்யப்படும் வெள்ளை சீனி, பருப்பு மற்றும் கோதுமை மாவின் மொத்த விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி ஒரு கிலோ வெள்ளை சீனியின் மொத்த விலை 300 ரூபாயிலிருந்து 265 ரூபாவாகவும், ஒரு கிலோ கோதுமை மாவின் மொத்த விலை 06

## முன்னாள் கிரிக்கெட் வீரர் லஹிரு பயணித்த கார் விபத்து

**கல்நேவ தினகரன் விசேட அநுராதபுரம் மேற்கு தினகரன், திப்பனை தினகரன் நிருபர்கள்**



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் லஹிரு திரிமான்ன பயணித்த கார், லொறியொன்றுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. அநுராதபுரம், திறப்பனை பிரதேசத்தில் 06

## சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை
**19, 20ஆம் திகதிகளில் விவாதம்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தை, இரண்டு தினங்களுக்கு 06

### நடைமுறையிலுள்ள பராடே சட்டம்
## திருத்தப்படும்வரை அதனை பின்பற்ற வங்கிகள் தீர்மானம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**




பாராளுமன்றத்தினூடாக நடைமுறையிலுள்ள சட்டம் திருத்தங்களுக்கு உட்படுத்தப்படும் வரை வங்கிகள் பொருத்தமான சந்தர்ப்பங்களில் பராடே சட்டத்தை உபயோகிக்கும் என வங்கிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க, பிணையாக வைத்துள்ள சொத்து தொடர்பில் 06

### ரமழான் தொழுகை நேரம்

| திகதி | 14-18 |
|---|---|
| ஸஹர் முடிவு | 04.48 |
| ஸுபஹ் | 05.03 |
| சூரிய உதயம் | 06.18 |
| ழுஹர் | 12.21 |
| அஸர் | 03.35 |
| மஃரிப் | 06.22 |
| இஷா | 07.31 |

# நகர்வலம்



## தலவதுகொட விகாராதிபதி காலமானார்



தலவதுகொட க ணே லந் த ரஜமஹா விகாராதிபதி மஹா வீ ர வ ங் சி க ஸ்யாமோபாலி மஹா நிக்காய வின் கோட்டே கல்யாணி தர்ம மஹா சங்க சபையின் சீனாதி சிவ் கோறளே உப பிரதான சங்கநாயக்கர் சாசன கீர்த்தி ஸ்ரீ தம்ம தஸ்ஸி அதி வணக்கத்துக்குரிய தலவதுகொட விமலதம்ம நாயக்க தேரர் 2024 மார்ச் மாதம் 12ஆம் திகதி அதிகாலை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் காலமானார்.

அவர் இறக்கும் போது வயது 83. அவரது இறுதி கிரியைகள் தலவத்துகொட பிரதமர் கல்லூரி மைதானத்தில் நாளை (16) சனிக்கிழமை மாலை இரண்டு மணிக்கு நடைபெறும்.

### இஷாக் எம்.பியின் நிதியுதவியில்

## தேவநம்பிய திஸ்ஸபுர அல் அஸ்ஹருக்கு புதிய கட்டட நிர்மாணத்திற்கு அடிக்கல்

**கெக்கிராவ குறூப் நிருபர்**

அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமானின் நிதியொதுக்கீட்டின் கீழ் தேவநம்பியதிஸ்ஸபுர அல் அஸ்ஹர் முஸ்லிம் பாடசாலையில் வகுப்பறை கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் கலந்துகொண்டு அடிக்கல்லினை நாட்டி வைத்தார். 5 மில்லியன் ரூபாய் செலவில் இரண்டு வகுப்பறைகளை உள்ளடக்கியதாக இக்கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

பாடசாலை அதிபர் நசீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சமூக சேவையாளர் எ.ஆர்.எம். தாரிக், முன்னாள் மத்திய நுவரகம் பளாத பிரதேச சபை தவிசாளர் என்.பி.ஜயசுந்தர, பொறியியலாளர் சஹ்ரின் அஹமட், பிரதேச அரசியல்வாதிகள், பாடசாலை அபிவிருத்திக் குழு மற்றும் பாடசாலை பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



## வீதியை கடக்க முற்பட்ட பெண் மீது பஸ் மோதி உயிரிழப்பு

### வென்னப்புவ நகரில் சம்பவம்

**தினகரன் விஷேட நிருபர்**





வென்னப்புவ நகரில் வீதியைக் கடக்கச் சென்ற பெண்ணொருவர் பயணிகள் பஸ் ஒன்றில் மோதி நேற்று முன்தினம் (13) உயிரிழந்துள்ளதாக வென்னப்புவ தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

லுனுவில, ஜயா மாவத்தையைச் சேர்ந்த பெடில்லே பொடி மெனிகே எனும் 69 வயதுடைய பெண்ணொருவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

பாதசாரிகள் குழுவொன்று வீதியைக் கடக்கும்போது, நீர்கொழும்பு பகுதியில் இருந்து சிலாபம் நோக்கிச் சென்ற பஸ் ஒன்று நிறுத்தப்பட்டு மீண்டும் முன்னோக்கிச் செல்ல முற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதன்போது, முன்பக்கமாக வீதியைக் கடக்க முற்பட்ட குறித்த பெண் மீது பஸ் மோதியுள்ளதுடன், உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து சம்பவம் தொடர்பில் வென்னப்புவ போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கெக்கிராவ பிரதேச உணவு சாலைக்கு சீல் வைப்பு

### சந்தேக நபர் இன்று நீதிமன்றில் ஆஜர்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**



கெக்கிராவ பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பாரியளவிலான உணவு களஞ்சியசாலை ஒன்றுக்கு கடந்த (12) சீல் வைத்துள்ளனர்.

கெக்கிராவ பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் அமைந்துள்ள இந்த பாரியளவிலான உணவு தொகை களஞ்சியசாலை ஊடாக நாட்டின் பல பகுதிக்கும் உணவு விநியோகம் செய்யப்படுகின்றது. கெக்கிராவ பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கடந்த (12) இந்த உணவு தொகை களஞ்சியசாலையை திடீர் சோதனைக்கு உட்படுத்தியிருந்தனர்.

இதன் போது மனித பாவனைக்கு பொருத்தமற்ற, காலாவதியான உணவு வகைகள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் உணவு சேமித்தல் போன்ற காரணங்களினால் தொகை களஞ்சிய சாலைக்கு சுகாதார பரிசோதகர்களினால் சீல் வைத்துள்ளதுடன் பின்னர் பி அறிக்கை மூலம் கெக்கிராவ நீதவான் நீதிமன்றத்திற்கு ஆஜர்படுத்தியுள்ளனர்.

இதன் போது இரண்டு இலட்சம் (200,000) சரீரப் பிணையில் சந்தேக நபர் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன் இன்று (15) மீண்டும் நீதிமன்றில் ஆஜராகுமாறும் அன்றைய தினம் உணவு களஞ்சியசாலை பொதுச் சுகாதார பரிசோதகர்களின் ஆலோசனைப்படி வடிவமைப்பு செய்யப்பட வேண்டும் எனவும் நீதிமன்றம் சந்தேக நபருக்கு தெரிவித்துள்ளது.



கொழும்பு 13, கொட்டாஞ்சேனை கல்பொத்த வீதி அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் முனியாண்டி சுவாமி கோவில் வருடாந்த வருஷாபிஷேக அலங்கார உற்சவம் கொடியேற்றத்துடன் நேற்று ஆரம்பமானது. உற்சவ குரு சிவஸ்ரீ மகேஸ் சுரேஸ்வர குருக்கள், ஆலய தர்ம கர்த்தா வி.சுகுமார், எஸ்.சந்திர ரூபன் சர்மா, சோதிட சிவஸ்ரீ எஸ்.சிவனேசன் சர்மா, சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபுசர்மா மற்றும் ரவிசந்திர குருக்கள் ஆகியோர் அருகில் காணப்படுகின்றனர். (படம்: எம். நசார்)



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் "சக்வல பிரபஞ்சம்" பஸ் வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் 85 ஆவது நிகழ்வாக 50 இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை பஸ் அநுராதபுரம் தலாவ மகா வித்தியாலயத்திற்கு (13) அன்பளிப்பு செய்து வைக்கப்பட்ட போது பிடித்த படம். (படம்: அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

### நவீன மாற்றங்களுடன்

## கோள் மண்டலம் மீண்டும் திறப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

திருத்த வேலைக்காக மூடப்பட்டிருந்த கோள் மண்டலம் மீண்டும் நேற்று முதல் மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாக அதன் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

கோள் மண்டலமானது கடந்த 27ஆம் திகதி பராமரிப்பு மற்றும் சில இயந்திரங்களின் புதுப்பித்தலுக்காக தற்காலிகமாக மூடப்பட்டது. திருத்த வேலைகள் நிறைவுபெற்று நேற்று முதல் மீண்டும் அது திறக்கப்பட்டதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

அதற்கிணங்க பாடசாலை மாணவர்கள் மேற்படி கோள் மண்டலத்தை பார்வையிடுவதற்காக செவ்வாய்க்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 10.00 மணி முதல் பார்வையிட முடியும். அத்துடன் பொதுமக்களுக்கும் காலை 10.00 மணி முதல் அதனை பார்வையிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### துபாய், சயீடா அமைப்பின் நிதியுதவியில்

## தெமட்டகொடை, கைரிய்யா பெண்கள் கல்லூரிக்கு 4 மாடிகள் கொண்ட கட்டடம்

### எதிர்வரும் 17ஆம் திகதி அடிக்கல் நாட்டு விழா

**(அஜ்வாத் பாஸி)**









தெமட்டகொடை கைரிய்யா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் துபாய், சயீடா பௌண்டேசனின் நிதியுதவியில் நவீன முறையில் நிர்மாணிக்கப்படவுள்ள நான்கு மாடிகளைக்கொண்ட புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 17ஆம் திகதி பி.ப 3.30 மணிக்கு பாடசாலை வளாகத்தில் வெகுவிமர்சையாக இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ஜனாபா ஏ.எல்.எஸ். நஸீரா ஹஸனார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எச்.எம். பௌஸி கலந்துகொள்வார்.

மேற்படி பாடசாலை அதிபர், சயீடா அமைப்பின் இலங்கை இணைப்பாளரும் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினருமான நௌஸர் பௌஸியிடம் விடுத்த வேண்டுகோளின் பேரில், பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள 04 மாடிகளைக் கொண்ட பாடசாலை கட்டடத்திற்கு ரூ. 11 கோடி நிதியுதவி பெற்றுக்கொடுக்கப்படவுள்ளது.

நௌஸர் பௌஸியின் பங்குபற்றலுடன் நடைபெறுகின்ற இந்நிகழ்வில் விசேட அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுத்தீன், எஸ்.எம். மரிக்கார் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, பைஸர் முஸ்தபா, முஜீபுர் ரஹ்மான், திலங்க சுமதிபால மற்றும் முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அஸாத் சாலி, முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர்களான அர்சத் நிஸாம்தீன், மொஹமட் அக்ரம் உட்பட கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர்கள், பரோபகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

**இவ்விழா தொடர்பில் கருத்து தெரிவித்த பாடசாலை அதிபர்;** சயீடா அமைப்பின் நிதியுதவியில் எமது பாடசாலைக்கு கட்டடமொன்றை பெற்றுத்தருமாறு இலங்கை இணைப்பாளர் நௌஸர் பௌஸியிடம் பாடசாலை சார்பாக நான் வேண்டுகோள் விடுத்தபோது, மிகவும் மகிழ்ச்சியுடன் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட அவர், கட்டட நிர்மாணப்பணிகளுக்கு சயீடா அமைப்பினூடாக நிதியை பெற்றுத்தருவதாக அவர் உறுதியளித்தார். அத்துடன் பாடசாலையில் அரசியல் செய்வதை அவர் ஒருபோதும் விரும்புவதில்லை என்றும் இப்பாடசாலைக்கு யார் ஒரு பேனாவையாவது கொடுத்து உதவினால் அவரையும் கட்டாயம் இவ்விழாவில் கலந்துகொள்ள ஆவன செய்யுமாறும் அவர் என்னை பணித்தார். அதனடிப்படையில் அரசியல் தலைவர்கள் உட்பட கொழும்பு மாவட்ட அரசியல் பிரமுகர்களும் எவ்வித பேதமுமின்றி கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.

## வட மத்திய மாகாணத்தில் 141 பேருக்கு புதிதாக ஆசிரிய நியமனம்



**(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)**

வடமத்திய மாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்பும் வகையில் 141 பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது. வடமத்திய மாகாண பிரதான அமைச்சின் செயலாளர் சமரதிவாகர மற்றும் வடமத்திய மாகாண முன்னாள் மாகாண அமைச்சர் எச்.எம். சேமசிங்க ஆகியோர் தலைமையில் இந்நிகழ்வு வடமத்திய மாகாண சபை கேட்போர் கூடத்தில் (13) நடைபெற்றது. இந்நியமனங்கள் கல்விப் பொதுத் தராதர உயர்தர பிரிவுகளில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களுக்கமைய சிங்கள மற்றும் தமிழ் மொழிப் பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு அமைவாக வழங்கி வைக்கப்பட்டது.

இவர்களுக்கு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பிரிவுகளில் கல்வி கற்பிப்பதற்காக இலங்கை ஆசிரிய சேவையின் 3ஆம் வகுப்பின் 1 ( அ) தரத்திற்கு பட்டதாரி ஆசிரிய நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. இதில் சிங்கள மொழி மூலம் 124 பேருக்கும் தமிழ் மொழி மூலம் 17 பேருக்கும் மொத்தமாக 141 பேருக்கு முதற்கட்டமாக இந்நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதமளவில் வடமத்திய மாகாணத்தில் 3313 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அந்த வெற்றிடங்கள் வடமத்திய மாகாணத்திலுள்ள எட்டு கல்வி வலயங்களிலும் காணப்படும் அதிகஷ்ட, கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் காணப்படும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்பும் வகையில் மிக விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் வடமத்திய மாகாண பிரதான அமைச்சின் செயலாளர் சமரதிவாகர தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வடமத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஜீ.கே.எஸ். சந்திரதிலக்க, பிரதான அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஜே. ரலியூதீன், வடமத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.டப்ளியூ. சமரகோன் மற்றும் கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 மார்ச் 15 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN

தினகரன்

**தொழுகை நேரம்**

சுபஹ் - 05.03
லுஹர் - 12.21
அஸர் - 03.35
மஃரிப் - 06.22
இஷா - 07.31

**இன்றைய சுபதினம்**

சோபகிருது வருடம் பங்குனி 02
ராகுகாலம் : காலை : 10.50 - 12.20வரை
சுபநேரம் : காலை : 06.20 - 07.50வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



"ஜயகமு ஸ்ரீலங்கா" :

## பொலன்னறுவையில் 16-17 இல் நடைபெறும்



நவீன உலகை எதிர்கொள்ளவதற்கு ஆற்றல் மிக்க இளைஞர்களை உருவாக்கும் நோக்கில் 'ஜயகமு ஸ்ரீ லங்கா' வேலைத்திட்டம் நாடுபூராகவும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

ஐந்தாவது வேலைத்திட்டம் கடந்த 9 , 10 திகதிகளில் குருநாகல் வெஹர விளையாட்டு மைதானத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் நடைபெற்றது. இதன் இரண்டாவது நாள் நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டார்.

இதன்போது பின்வரும் விடயங்கள் உள்ளிட்ட பல வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

உள்நாட்டு, வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் வெளிநாட்டு தொழிலாளர்களின் முறைப்பாடுகளைப் பெறுதல்,வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கான பதிவுகள் மேற்கொள்ளல்,தொழில் வங்கியில் பதிவு செய்தல்,வெளிநாடு செல்வதற்கு கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

06

ரமழான் சிந்தனை

## ஸஹர் செய்வதன் சிறப்புக்கள்

முஸ்லிம்கள் நோன்பு நோற்பதற்காக பின்னிரவில் உட்கொள்ளும் உணவு தான் ஸஹர் (அதிகாலை) உணவு எனப்படுகிறது. இது நபி(ஸல்) அவர்களின் வழிமுறையாகும். அன்னார் ஸஹர் உணவு உட்கொள்ளக்கூடியவர்களாகவும் ஸஹாபாக்களை ஆர்வமூட்டக்கூடியவர்களாகவும் இருந்தார்கள். 'ஸஹர் செய்யுங்கள். ஏனெனில் ஸஹர் செய்வதில் பரகத் உள்ளது என்று அன்னார் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி)

இந்த நபிமொழியானது ஸஹர் செய்வதன் சிறப்பையும் மகத்துவத்தையும் எடுத்துக்காட்டக்கூடியதாக உள்ளது. அதாவது ஸஹர் செய்வதில் பரகத் (வளம்) இருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் எதிர்பார்க்கும் விடயங்களில் ஒன்று தான் பரகத். அவ்வாறான ஒன்றை கொண்டதாக இந்த ஸஹர் அமைந்திருக்கிறது. ஸஹர் உணவின் மூலம் அல்லாஹ் எமக்கு பரக்கத் செய்கிறான். நோன்புடைய பகல் வேளையில் களைப்பின்றி இபாதத் செய்வதற்கும் வேலைகளை செய்வதற்கும் இந்த சஹர் உணவு ஓர் உந்து சக்தியை வழங்கக்கூடியதாகவும் உள்ளது

அதேநேரம் 'ஸஹரை தாமதப்படுத்தி நோன்பு துறப்பதை விரைவுபடுத்தும் வரை மக்கள் நன்மையில் நீடித்து இருப்பார்கள்' என்றும் 'நமது நோன்பிற்கும் வேதக்காரர்களின் நோன்பிற்கும் இடையில் வித்தியாசம் ஸஹர் செய்வதாகும்' என்றும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: ஸஹீஹு முஸ்லிம்)

ஸஹரை தாமதப்படுத்துவதும் நோன்பு துறப்பதை விரைவுபடுத்துவதும் கூட மிக முக்கியமான விடயம் என்பதையும் இந்நபிமொழிகள் எடுத்துக்காட்டுகிறது. அத்தோடு ஸஹர் செய்வது என்பது தனித்துவமானமதாகவும் அமைந்திருக்கிறது.

ஆகவே நபிகளாரின் வழிகாட்டல்கள் அமைய ஸஹர் செய்வோம். அதன் ஊடாக அல்லாஹ்வின் அருளை அடைந்து கொள்வோம்.

முப்தி எ.எச்.எம் மின்ஹாஜ்
(காஷிபி, மழாஹிரி) நிந்தவூர்

தவக்கால சிந்தனை

## மனித திட்டத்திற்கு ஏற்புடையதற்ற இறைதிட்டம்

ஞான நூல் மூலமான இன்றைய இறைவார்த்தையில், இயேசுவிற்கு என்ன நடக்கும் என்பதை முன்னுரைப்பதைக் காண்கிறோம். இயேசுவின் விடுதலையிலிருந்து மாறுபட்டதாக, யூதர்கள் அடிமைத்தனத்தலிருந்து விடுதலை பெறுவதைக்குறித்த கருத்தினைக் கொண்டிருந்தார்கள். கடவுளிடம் திட்டமொன்று உண்டு. அது யூதர்கள் நினைப்பதைவிட பெரியதாகும்.

'கடவுள் உடைந்த உள்ளத்தினருக்கு அருகிலுள்ளார்' என்கிற ஆறுதலினை இன்றைய திருப்பாடல் தருகிறது. நமது சமூகத்தில் தொடர்ச்சியாக அடக்குமுறை அநீதி போன்றவற்றைக் காண்கிறோம், இத்தருணங்களில் நாம் மனம் தளர்ந்துவிடக்கூடாது, காரணம் கடவுள் நம்மோடு இருக்கிறார். மனிதனின் சுதந்திர விருப்பம் அவன் மத்தியில் அடக்குமுறை, அநீதி போன்றவற்றைக் கொணர்ந்தாலும் கடவுள் நம்மோடு இருக்கிறார். வரலாற்றில் மக்களை இவ்வாறான நிகழ்வுகளில் வழிநடத்தியதுபோல நம்மையும் அவர் வழி நடத்திச் செல்வார்.

இன்றைய யோவான் நற்செய்தியானது கடவுளின் திட்டம் மனித திட்டத்திற்கு ஏற்புடையதாக இருக்க முடியாது என்பதை எடுத்துரைக்கிறது. இயேசுவின் பணியில், அவரது போதனை பலரின் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யாமையினால் பலரும் அவருக்கு எதிரிகளாக மாறினார்கள். பல யூதர்களால் இயேசு யார், அவர் எதனை பிரதிநிதித்துவப் படுத்துகிறார் என்பதனை கிரகித்துக்கொள்ள முடியாமல் இருந்தது.

இயேசு உரத்த குரலில்,"நான் யார்? நான் எங்கிருந்து வந்தேன் என்பவை உங்களுக்குத் தெரியும். ஆயினும் நானாக வரவில்லை. என்னை அனுப்பியவர் உண்மையானவர். அவரை உங்களுக்குத் தெரியாது. எனக்கு அவரைத் தெரியும். நான் அவரிடமிருந்து வருகிறேன். என்னை அனுப்பியவரும் அவரே" என்கிறார் (யோவான் 7:2829).

மறுபக்கத்தில் இயேசுவை உமக்குத் தெரியும். உம்மைக்குறித்து அவரிடம் ஒரு திட்டமுள்ளது என்பதும் உமக்குத் தெரியும். நீர் எதிர்பார்த்த வண்ணம் நிகழ்வுகள் நடைபெறாத போது, ஏமாற்றமடையாது, என் மட்டிலான கடவுளின் திட்டம் யாது என்பதைக் குறித்து வியப்புற வேண்டும். நீர் தற்காலிகமாக மனம் உடைந்து போகலாம், ஆயினும் கடவுள் உம்மோடு உள்ளார் என்பதை உணர்ந்து கொள்ளும். அவர் உம்மை, அவரது நேரத்தில் அவரது வழிகளால் விடுவிப்பார்.

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)

# சுற்றுலாத் துறையூடாக நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்த முடியும்

### காலி நகரம் சுற்றுலாத் தளமாக்கப்படும்





கடற்கரை ஓரங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள சுற்றுலாத்துறையை நாட்டுக்குள் கொண்டு வந்து பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

நாட்டின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதில் தென்பகுதிக்குத் தனித்துவமான இடமுள்ளதாகவும் காலியை பிரதான சுற்றுலா நகரமாக அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

காலி, ஹோலுவாகொட "செரின் ரிவர் பார்க்" சூழலியல் பூங்காவை (13) மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கும் நிகழ்விலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் தெரிவித்தார்.இங்கு பேசிய ஜனாதிபதி;

இத்திட்டம் ஒரு பொருளாதார மேம்பாட்டுத் திட்டமாகும். நாம் இதுபோன்ற திட்டங்களில் கவனம் செலுத்த வேண்டும். இன்று காலி முக்கிய சுற்றுலாத் தளமாக மாறியுள்ளது. அதை நாம் மேலும் மேம்படுத்த வேண்டும். இதன் மூலம் இப்பகுதி மக்கள் பெருமளவு வருமானம் பெற முடியும்.

சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் அதே வேளையில் சுற்றுச்சூழலையும் பாதுகாக்க வேண்டும். அதன்படி, இந்தப் பகுதியில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கத் தனியான சட்டம் கொண்டு வரப்படும்.

சுற்றுலா துறையில் தென் மாகாணத்திற்கு ஒரு சிறப்பிடம் உள்ளது. காலி கோட்டையில் உள்ள அனைத்து அரச அலுவலகங்களையும் அகற்றி சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில் அவற்றை வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.அத்துடன், முறையான திட்டமிடலின் ஊடாக காலி நகரை சுற்றுலாப் பிரதேசமாக அபிவிருத்தி செய்வதற்கும் நாம் செயற்பட்டு வருகின்றோம்.

06

## வெடுக்குநாறி விவகாரம்: சபை அமர்வுகளை புறக்கணிக்க தமிழ் எம்பிக்களிடம் கோரிக்கை

வவுனியா – வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் நடைபெற்ற அத்துமீறல்களுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை, பாராளுமன்ற அமர்வுகளைப் புறக்கணிக்கும் தீர்மானத்தை எடுக்குமாறு ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களிடம், கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் சார்பில், தலைமை ஒருங்கிணைப்பாளர் அகத்தியர் அடிகளார், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கோரிக்கை கடிதங்களையும் அனுப்பி வைத்துள்ளார்.

கண்டன அறிக்கைகள் வெளியிட்டும், கவனயீர்ப்புக்கள் நடத்தியும் வவுனியா, வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலய விவகாரத்திற்கு தீர்வு கிடைக்கவில்லை எனவும் அவர் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், அரசாங்கத்திற்குப் பாரிய அழுத்தத்தை பிரயோகிக்கவும், சர்வதேச கவனத்தை ஈர்த்து இப் பிரச்சனைக்கு தீர்வைப் பெறவும் பாராளுமன்றத்தை பகிஷ்கரிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் சார்பில், தலைமை ஒருங்கிணைப்பாளர் அகத்தியர் அடிகளார் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

## இந்தியாவின் சில பகுதிகளில் நிலநடுக்கம்

இந்தியாவின் மத்தியப் பிரதேச மாநிலத்தின் தெற்கு பகுதியில் லேசான நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாக நில அதிர்வுக்கான தேசிய மையம் தெரிவித்துள்ளது.

மத்தியப் பிரதேச சியேனி மாவட்டத்தில் (13 ) இரவு 8.02 மணியளவில் இந்நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. குறித்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோளில் 3.6 ஆக பதிவாகியுள்ளது. 5 கிலோமீட்டர் ஆழத்துக்கு அதிர்வுகள் உணரப்பட்டதாக நில அதிர்வுக்கான தேசிய மையம் குறிப்பிட்டுள்ளது.

மத்தியப் பிரதேசத்தின் தெற்கு பகுதியாக இருந்தாலும், மகாரஷ்டிரத்தின் அமராவதி மற்றும் சத்தீஸ்கர் மாநிலத்தின் ராய்ப்பூர் அருகிலும் நிலநடுக்க அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன .

## வலுவிழக்கிறது அமெரிக்க டொலர்



அமெரிக்க டொலர் நேற்று முன்தினத்துடன் ஒப்பிடும் போது நேற்று (14 ) அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் உயர்வடைந்து, டொலரின் பெறுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நேற்றைய (14) நாணய மாற்று வீதங்களின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 310.64 ரூபாவாகவும், கொள்வனவு விலை 301.01 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

மேலும், கனேடிய டொலரின் விற்பனை விலை 231.78 ரூபாவாகவும், கொள்வனவு விலை 222.39 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

இதன்படி, யூரோ ஒன்றின் விற்பனை பெறுமதி 341.50 ரூபாவாகவும், கொள்வனவு பெறுமதி 327.83 ரூபாவாகவும் உள்ளது.

அதேசமயம், ஸ்டேர்லிங் பவுணின் இன்றைய விற்பனை பெறுமதி 398.82 ரூபாவாகவும், கொள்வனவு பெறுமதி 383.73 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் அமெரிக்க டொலரின் கொள்வனவு பெறுமதியானது 322 ரூபாவுக்கும் அதிகமாக இருந்தது. இந்நிலையில் தற்போது 301 ரூபா வரையில் குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய உயர்ஸ்தானிகர் பஷில் ராஜபக்ஷ சந்திப்பு

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஷில் ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

இருதரப்பு உறவுகள், சமகால அரசியல் விடயங்கள், இரு நாடுகளின் நலன்களுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் தனது X தளத்தில் பதிவிட்டுள்ளது.

## அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகள் இரண்டாம் கட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் திகதி மார்ச் 22 வரை நீடிப்பு

### இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

குறைந்த வருமானமுள்ள குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுக்கான இரண்டாம் கட்ட விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் திகதி இம் மாதம் 22 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. அதற்காக தற்போது 1,30,000 புதிய விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுக்கான இரண்டாம் கட்ட. விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் திகதி இன்று 15 ஆம் திகதி யுடன் நிறைவு பெறுவதாக ஏற்கனவே அரசாங்கம் அறிவித்திருந்தது.

எனினும் புதிதாக விண்ணப்பிப்போரின் நலன் கருதி அதற்கான திகதி நீடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகளுக்கான இரண்டாம் கட்ட கொடுப்பனவுகள் எதிர்வரும் ஜூன் மாதம் முதல் வழங்கப்படும் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இலங்கைக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்க இந்தியா இணக்கம்

சூரிய ஒளி, காற்று, உயிரி மற்றும் மின்சார இணைப்பு ஆகிய துறைகளில் இலங்கைக்கு சாத்தியமான தொழிநுட்ப உதவிகளை வழங்க இந்தியா இணங்கியுள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் இதுபற்றி அறிவித்துள்ளது. இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி இது குறித்து ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட்டிருந்தார்.இந்திய மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கிடையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையின் ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானது.

இந்நிலையில், இந்த ஒப்பந்தத்தின் கீழ் அமைக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொடர்பான கூட்டு செயற்குழுவின் முதல் கூட்டம், கொழும்பில் அண்மையில் நடைபெற்றுள்ளது. கூட்டத்திற்கு இந்திய தரப்பிலிருந்து புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் செயலாளர் பூபிந்தர் சிங் பல்லா மற்றும் அரசாங்கத் தரப்பிலிருந்து மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சகத்தின் செயலாளர் சுலக்சன ஜெயவர்தன ஆகியோர் தலைமை தாங்கினர்.

இச்சந்திப்பில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜாவும் கலந்து கொண்டார். இதன் போதே இலங்கைக்கு இந்தியா உறுதிமொழி வழங்கியுள்ளது.

## டூனா மீனுக்கு நிர்ணய விலை கொள்கைத் திட்டம் அவசியம்

மீன் ஏற்றுமதியாளர்கள் தங்களது உற்பத்திகளுக்கு நியாயமான நிர்ணய விலை வகுத்து செயற்படுத்த வேண்டுமெனவும், இதற்காக தேசிய கொள்கைத் திட்டமொன்று வகுக்கப்பட வேண்டுமெனவும் பலநாள் மீன்பிடிப் படகு உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடற்றொழில் அமைச்சில் (13 ) கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம் பெற்ற கலந்துரையாடலின் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனார். அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

எரிபொருள் விலையேற்றம், ஐஸ் விலை அதிகரிப்பு, கடற்றொழில் உபகரணங்களின் விலை அதிகரிப்பு, வற் விரி விதிப்பு மற்றும் இடைத்தரகர்களின் தலையீடு காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளோம். இதனால் தங்களால் பிடிக்கப்படும் டூனா மீன்களுக்கு ஆகக் குறைந்தது கிலோ ஒன்றுக்கு 2000 ரூபா விலை நிர்ணயிக்கப்படுகிறது. இதன் பொருட்டு தேசியக் கொள்கையொன்று வகுக்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்தனர்.

## குழந்தைகள் இறப்பு வீதம் தெற்காசியாவில் குறைவடைவு

தெற்காசியாவில் குழந்தைகள் இறப்பு வீதம் மூன்றில் இரண்டு பங்கு குறைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. யுனிசெஃப் வெளியிட்ட அறிக்கையில் இதுபற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. தெற்காசியாவில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு எண்ணிக்கை கடந்த இரண்டு தசாப்தங்களில் மூன்றில் இரண்டு பங்கு குறைந்துள்ளது. UNICEF, உலக சுகாதார அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை பிரிவு, உலக வங்கி குழு ஆகியவற்றின் சமீபத்திய இறப்பு மதிப்பீடுகளின்படி இது தெரியவந்துள்ளது. 1990 மற்றும் 2022 க்கு இடையில், ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு எண்ணிக்கை 5 மில்லியனில் இருந்து 1.3 மில்லியனாக குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 1990 இல் 72% ஆக இருந்த மரண வீதம் 2000 இல் 62% ஆக குறைந்துள்ளது.

இதேவேளை, தெற்காசியாவில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் நான்கில் ஒரு மரணம் குறைப்பிரசவத்தால் ஏற்படுவதாகவும், பிறக்கும் போது ஏற்படும் சிக்கல்கள் மற்றும் நிமோனியா போன்ற பல்வேறு நோய்கள் இதற்குக் காரணம் என்றும் அறிக்கை காட்டுகிறது.உலகளவில் குழந்தைகளை மிகவும் பாதிக்கக்கூடிய நேரமாக முதல் மாதமாக உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் பங்குனி மாதம் 02ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரமழான் பிறை 03

## குறள் தரும் சிந்தனை



அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை

*பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று நாள் கடத்தாமல் அறவழியை மேற்கொண்டால் அது ஒருவர் இறந்தபின் கூட அழியாப் புகழாய் நிலைத்துத் துணை நிற்கும்.*

# அமைதியான ஒரு கொலைகாரன்!

தெற்காசிய நாடுகளை எடுத்துக் கொண்டால் இலங்கையிலேயே நீரிழிவு நோயாளர்களின் வீதம் அதிகமாகக் காணப்படுவதாக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தகவலலொன்றைத் தெரிவித்துள்ளார். இந்தத் தகவல் உண்மையிலேயே அதிர்ச்சி தருவதாகும்.

இயந்திரமயமான வாழ்க்கை முறை, மனஅழுத்தம், உணவுப் பழக்கங்கள், பரம்பரை இயல்பு போன்ற பல்வேறான காரணிகளால் நீரிழிவு வியாதி ஏற்படுகின்றது. அதுவும் தெற்காசிய நாடுகளில் வாழும் மக்கள் மத்தியிலேயே நீரிழிவு நோய் அதிகமாகக் காணப்படுகின்றது. இந்நாடுகளில் வாழ்கின்ற மக்களின் உணவுப் பழக்கமும் நீரிழிவு நோய்க்கான முக்கிய காரணியாகின்றது.

நீரிழிவு நோயை 'அமைதியான கொலைகாரன்' என்று மருத்துவ உலகம் கூறுகின்றது. அதாவது ஒருவரின் உடலில் நீரிழிவு நோய் இருப்பதற்கான அறிகுறிகளை அதிகம் காண முடியாது. அந்நோய் ஒருவரின் உடலில் அமைதியான முறையில் நீண்ட காலம் இருந்து கொண்டு, எதிர்காலத்தில் திடீரென்று பாதிப்பை வெளிப்படுத்துகின்றது.

நீரிழிவின் நீண்டகாலப் பாதிப்பு மிகவும் பாரதூரமானது. அந்நோயானது உடலில் நீண்ட காலம் அமைதியாக இருந்து விட்டு இறுதியில் ஒருவரின் உடல்நிலையையே மோசமான நிலைமைக்குக் கொண்டு வந்து விடுகின்றது. கண்பார்வைக் கோளாறு, இருதயத் தாக்கம், ஆறாத கால்புண்கள், நரம்புக் கோளாறுகள், சிறுநீரக செயலிழப்பு என்றெல்லாம் பலவகையான பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியது நீரிழிவு வியாதி.

நீரிழிவை ஆரம்பநிலையிலேயே கண்டறிந்தால் உணவுக் கட்டுப்பாடு, மருந்துகள், உடற்பயிற்சி போன்றவற்றுடன் நோயைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும். இவ்வியாதியைக் கண்டறியாமல் அலட்சியத்துடன் இருப்பவர்களே இறுதியில் பாரதூரமான பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். நீரிழிவை அலட்சியம் செய்ததன் காரணமாக ஏராளமானவர்கள் உயிரிழந்துள்ளனர் என்பதையும் இவ்விடத்தில் எச்சரிக்கையுடன் கூற வேண்டியுள்ளது.

எனவே நீரிழிவு குறித்த அவதானமே இங்கு அவசியமாகின்றது. நீரிழிவு நோய்க்கான சில அறிகுறிகள் உள்ளன. அந்த அறிகுறிகள் தொடர்பான அவசியமும் மக்களுக்கு அவசியமாகின்றது. ஆரம்பநிலையிலேயே அந்நோயைக் கண்டுபிடித்து பொருத்தமான மருத்துவரிடம் ஆலோசனை பெற வேண்டியது மிகவும் அவசியம். நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் பலர் உரிய மருத்துவ ஆலோசனை மற்றும் சிகிச்சைகளின் பலனாக தொண்ணூறு வயதுக்கு மேலும் உயிர்வாழ்ந்துள்ளனர் என்பதை நினைவிற் கொள்வது அவசியம்.

எமது உடலின் இரத்தத்தில் சீனியின் அளவு அதிகமாவதுதான் நீரிழிவு நோய். இதற்குக் காரணம் இன்சுலின் சரியான அளவு உற்பத்தி ஆகாதது அல்லது உற்பத்தியான இன்சுலினை சரியான அளவு பயன்படுத்த முடியாதது.

நமது உடலில் உள்ள கணையம் என்ற உறுப்பில் இருந்து இன்சுலின் என்ற ஹோர்மோன் சுரக்கிறது. இது நாம் உண்ணும் உணவில் உள்ள சீனியை கொழுப்பாகவும், கிளைகோஜென்னாகவும் சேமித்து வைக்க உதவுகிறது. நாம் உண்ணுகின்ற உணவின் அளவுக்குத் தக்கவாறு இன்சுலின் தானாகவே சுரந்து இந்தப் பணியைச் செய்கிறது.

பல்வேறு காரணங்களால் கணையத்திலிருந்து சுரக்கும் இன்சுலினின் அளவு குறையும் போது, உணவில் உள்ள சீனியானது சக்தியாக மாற்றப்படாமல் அப்படியே இரத்தத்தில் நேரடியாகக் கலந்து விடுகிறது. இதனால் இரத்தத்தில் சீனியின் அளவு அதிகரிக்கிறது. அது 180 மில்லிகிராம் சதவீதத்தைத் தாண்டும் போது சிறுநீரிலும் சீனி வெளியாகிறது. இதையே நீரிழிவு நோய் என்கிறோம்.

நீரிழிவு நோய் என்பது இரத்தத்தில் அதிக சீனியே தவிர சிறுநீரில் அல்ல. இதனால் ஏற்படும் நீண்ட கால விளைவுகள் பார்வை இழப்பு, பக்கவாதம், கால் இழப்பு, சிறுநீரக செயலிழப்பு, மாரடைப்பு போன்றவையாகும் என்பதை உணர்ந்து கொண்டு அவதானமாக இருக்க வேண்டும்.

கட்டுப்படுத்தப்படாத நீரிழிவு நோயானது உடல் உறுப்புக்களை எந்த அறிகுறிகளும் இல்லாமல் மெதுவாக பாதிக்கும். இரத்தக் குழாய்களில் படியும் சீனியானது மாரடைப்பு, கண், கால், சிறுநீரகம் மற்றும் நரம்பு மண்டலத்தையும் பாதிக்கும். இரத்த அழுத்தம் அதிகரிக்கும். கண் பார்வை பறிபோகும் அபாயமும் ஏற்படும்.

மாரடைப்புக்கான முக்கிய காரணிகளுள் நீரிழிவு நோயும் ஒன்று. கால் நரம்புகள் மோசமாக பாதிக்கப்படுவதால் பலருக்கு கால்களையோ, கால்விரலையோ அறுவை சிகிச்சை செய்து அகற்றுவதை கேள்விப்பட்டிருப்பீர்கள்.

மாரடைப்பு மற்றும் சிறுநீரக செயலிழப்புகளுக்குச் சிகிச்சை செய்ய தேவைப்படும் மருத்துவ செலவுகள் மிகவும் அதிகம். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு முடிந்தவரை நீரிழிவு நோய் வராமல் தடுப்பதும், அப்படியே வந்துவிட்டாலும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதும் இன்றியமையாதது.

இலங்கையில் நீரிழிவு நோயாளர்களின் வீதம் அதிகரித்துச் செல்வதனால் மக்கள் அனைவரும் இவ்விடத்தில் மிகவும் அவதானம் பேணுவது அவசியமாகின்றது.

editor.tkn@lakehouse.lk

# நோன்பின் மாண்பை பேணி இரட்டிப்பு நன்மைகளைப் பெற்றுக் கொள்வோம்!

இஸ்லாத்தில் ஐம்பெரும் கடமைகளுள் நோன்பு மிகப் பிரதானமான தொன்றாகும். வெறுமனே பசித்திருப்பது மாத்திரமன்றி, ஒரு மனிதன் தனது ஐம்புலங்களையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதே நோன்பின் பிரதான கோட்பாடாகும். இதனை அல்லாஹ் தனது அருள்மறையாம் அல் குர்ஆனில் இவ்வாறு கூறுகிறான்; உங்களின் முன்னோருக்கு விதியாக்கப்பட்டதை போன்று உங்களுக்கும் நோன்பு விதியாக்கப்பட்டுள்ளது.

பெருமானார் (ஸல்) அவர்கள் அருளியதாக ஹஸ்ரத் சல்மான் ( ரலி) அறிவிக்கிறார்கள். ஷஃபான் மாதம் இறுதியில் ஓர் நல் உபதேசம் செய்தார்கள்.

மனிதர்களே, உங்களிடம் ஓர் மகத்தான மாதம் வருகிறது. அது பறக்கத் பொருந்திய மாதமாகும். அதில் லைலதுல் கத்ர் என்ற ஓர் இரவு இருக்கிறது. அது ஆயிரம் மாதங்களை விட சிறந்த இரவாகும். அதில் நோன்பு நோற்பதை அல்லாஹ் கடமையாக்கியுள்ளான். அதனுடைய இரவு நேரங்களில் நின்று (தராவீஹ்) தொழுவதை நன்மைக்குரிய செயலாக ஆக்கியுள்ளான்.

எந்த மனிதன் இம்மாதத்தில் ஒரு நற்செயலைச் செய்து அல்லாஹுத்தஆலாவின் நெருக்கத்தை உண்டாக்கிக் கொள்கிறாரோ அவர் ரமழான் அல்லாத மற்றைய மாதங்களில் ஒரு பர்ழை நிறைவேற்றியவர் போலாவார். மேலும் இம்மாதத்தில் ஒரு பர்ழை நிறைவேற்றியவர் ரமழான் அல்லாத மாதங்களில் எழுபது பர்ழை நிறைவேற்றியர் போலாவார்.

இம்மாதம் பொறுமையின் மாதமாகும். பொறுமையின் பிரதிபலன் சொர்க்கமாகும். எனவே, நாம் நோன்பு நோற்று வாயையும், வயிற்றையும் கட்டுப்படுத்துவது போல் எமது இதர உறுப்புக்களையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும். அப்போதுதான் நோன்பின் பலாபலன் எம்மைச் சேரும். நல்லதை பேசி நல்லதை செய்து ஏனைய மனிதர்களுடன் சுமுகமாக பழகி, சுக துக்கங்களில் பங்கு கொள்வதாலும், அல்லாஹ் தந்தவற்றில் ஒருபகுதியை



ஏனையோருக்கு வழங்குவதாலும் ரிஸ்க் எனும் அபிவிருத்தியினை அல்லாஹ் வழங்குகிறான்.

எந்த மனிதர் ஓர் நோன்பாளியை நோன்பு துறக்கச் செய்கிறாரோ அவருடைய அனைத்து பாவங்களும் மன்னிக்கப்படுகின்றன. நரக நெருப்பிலிருந்து அவர் விடுதலையாக காரணமாகிறது. இது மாத்திரமன்றி நோன்பு நோற்றவரைப் போன்று நன்மையும் கிடைத்து விடுகிறது. எனினும் நோன்பாளியுடைய நன்மையிலிருந்து எதுவும் குறைக்கப்பட மாட்டாது என அண்ணல் நபி (ஸல்) கூறிய போது, ஸஹாபாக்கள் "யாறசூலுல்லாஹ் எங்களில் நோன்பாளிகளை நோன்பு துறக்க வைக்க சக்தி பெற்றவர்கள் இல்லையே" என்ற போது, றலுல்லாஹ் (ஸல்) அவர்கள் "வயிறு நிறைய உணவளிக்க வேண்டியதில்லை. மாறாக ஒரு பேரீச்சம்பழம் அல்லது ஒரு மிடறு தண்ணீர் அல்லது பால் இவற்றில் ஏதேனும் ஒன்றைக் கொண்டு நோன்பு துறக்கச் செய்தாலும் அவருக்கு அல்லாஹ் அந்த நன்மையை வழங்கி விடுகிறான்" என்று கூறிய பின்னர் "இம்மாதத்தில் முதற் பகுதி றஃஹ்மத்துடையதாகவும் நடுப்பகுதி பாவமன்னிப்புடையதாகவும் இறுதிப் பகுதி நரக நெருப்பை விட்டும் விடுவிப்பதாகவும்" என்றார்கள்.

'எவரேனும் இம்மாதத்தில் தன் அடிமைகள் வேலைக்காரர்களின் வேலைப் பழுவை குறைப்பாரோ அவரை அல்லாஹ் மன்னித்து நரக விடுதலையும் அளித்து விடுவான் எனவும் அருளினார்கள். எனவேதான் ரமழான் மாதத்திற்கு முன்னரே ஷஃபான் மாத இறுதியிலேயே றஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் புனிதமிகு ரமழான் மாதத்தின் நோன்பைப் பற்றிக் கூறினார்கள்.

எனவே, நாமும் புனித நோன்பு மாதத்தின் ஓர் வினாடியையேனும் வீணாகக் கழிக்காது வீண் பேச்சுக்களை விட்டும், விளையாட்டுக்கள்,தொலைக்காட்சி பார்ப்பதை தவிர்த்தும் தொழுகைகளை இமாம் ஜமாஅத்துடன் தொழுது இதர சுன்னத்தான நபிலான தொழுகைகளில் ஈடுபட்டு திக்ர், ஸலவாத்,ஸ்திஃபார் எனும் பாவமன்னிப்பு அல் குர்ஆன் திலாவத் போன்ற இன்னோரன்ன நல் அமல்களில் ஈடுபட்டு வருவதுடன் நோன்பின் மாண்பைப் பேணி இரட்டிப்பு நன்மைகளைப் பெறுவோமாக!

தவிரவும் ஏழை எளியோரின் துயர்துடைக்கவென எம் மீது விதியாக்கப்பட்ட ஸகாத் எனும் ஏழை வரியினை முறையாகக் கணக்கிட்டு வழங்கி எமது பொருட்களிலும், வாழ்க்கையிலும் பறக்கத்தையும், அபிவிருத்தியையும் பெற்று நோன்பின் பலாபலன்களை முழுமையாக, முறையாக பெற்ற நல் மக்களாக எம்மை ஆக்கிக் கொள்வோம்.



**எம்.ஏ.எம். ஹஸனார் ஜே.பீ...**
*(ஊவா சுழற்சி நிருபர்)*

# மருதமுனையில் நாணல் கலை இலக்கிய வட்டத்தின் 'நாணல்' சஞ்சிகை வெளியீடும் கௌரவிப்பு நிகழ்வும்

மருதமுனை நாணல் கலை இலக்கிய வட்டம் 'அவளுடைய பலம் நாட்டுக்கு முன்னேற்றம்' எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்த மகளிர் தின நிகழ்வின் சஞ்சிகை வெளியீடும், சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வும் மருதமுனை கலாசார மத்திய நிலையத்தில் சிரேஷ்ட ஊடகவியலாளர் மர்ஹும் கலாபூசணம் பி.எம்.எம்.ஏ.காதர் நினைவரங்கில் அமைப்பின் தலைவி பாத்திமா சூபா தலைமையில் அண்மையில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான இலக்கிய வித்தகர் விருது பெற்ற நாணல் கலை இலக்கிய வட்டத்தின் உறுப்பினரும் எழுத்தாளருமான ஆசிரியர் மசூறா சுஹ்றுத்தீன், இலக்கிய வட்டத்தின் ஊடக ஆலோசகராக இருந்து 2022 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண ஊடகத்துறைக்கான இளங்கலைஞர் விருது பெற்றுக் கொண்ட ஊடகவியலாளர் ஏ.எல்.எம்.ஷினாஸ், மருதமுனையின் முதலாவது பெண் கவிஞரான திருமதி மாஜிதா தவ்பீக் ஆகியோர் விசேட விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். நாணல் கலை, இலக்கிய வட்டம் வருடா வருடம் நடத்தி வருகின்ற மகளிர் தின நிகழ்வின் போது சிறந்த சாதனைத் தாய்மார்களை பாராட்டி கௌரவிப்பது வழமை. அந்த வரிசையில் இம்முறை சிறந்த சாதனை தாயாக இருவர் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள். ஒருவர் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீமின் தாயாரான இஸ்மாலெப்பை முகம்மது செய்னப்பு, மற்றையவர் ஏ.ஆர். சித்தி நயீமா ஆவார்.



நாணல் கலை, இலக்கிய வட்டத்தின் முதலாவது சஞ்சிகையான 'நாணல்' முதலாவது பிரதி பிரதம அதிதியாக கலந்து கொண்ட திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ஏ.எல்.எம். அதாஉல்லாவிடம் கையளிக்கப்பட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது. நாணல் கலை இலக்கிய வட்ட உறுப்பினர்களின் கலை கலாசார நிகழ்வுகள் இங்கு அரங்கேற்றப்பட்டதோடு, அறிவிப்பாளர் சந்திரபோஸ் கஜானா நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார். இந்நிகழ்வில் கல்முனை பிரதேச செயலாளர் ஜெ.லியாகத் அலி, ஸ்ரீலங்கா சென்ஜ்டி பரா மெடிக்கல் கல்லூரி பணிப்பாளர் எம்.எம். சப்றாஸ் மன்சூர், இன்ஸிரியூட் ஒப் கிளைமேட் சேன்ச் நிறுவனத்தின் பணிப்பாளர் எம்.பி.ஸியாரத்துல் பெறோஸ் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டதுடன் கலாசார உத்தியோகத்தர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





**பெரியநீலாவணை விசேட நிருபர்...**

# யாழில் தொழில் தயார் திறன் கொண்ட தலைமுறையை உருவாக்கும் முயற்சி

நாளை சனிக்கிழமை மார்ச் 16 ஆம் திகதி, நீண்ட பயணத்தின் முதற் காலடியை எடுத்து வைக்கிறது யுனிக்கொம் TIC (UNICOM Training and Innovation Center – Unicom TIC) தன்னார்வு தொண்டர் நிறுவனம்.

இலங்கையின் தகவல் தொழில் நுட்பத்துறையின் அடுத்த கட்டத்துக்கு நகர்த்தும் பெருங்கனவுடன் யுனிகொம் TIC யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு, நவீன கணிணி தகவற்துறை வசதிகளுடன், ஏப்ரல் 1 ஆம் திகதியிலிருந்து தனது பணிகளைத் தொடங்குகிறது.

யாழ்ப்பாணத்தில் Unicom TIC இன் இம்மாபெரும் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொள்ள இலங்கையிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பல கல்விசார், தொழில்சார் வல்லுனர்களும் வருகை தரவிருக்கிறார்கள். முற்றுமுழுதாக தன்னார்வ நோக்குடன் நிறுவப்படும் Unicom TIC செயற்பாடு சம்பந்தமான சில விளக்கங்கள் வருமாறு:

★நோக்கங்கள்:

1. கணிணித்துறையில் தொழில்தயார் திறன்கள் கொண்ட இளைய சமூகத்தை உருவாக்கல்

2. 12 மாதங்களுக்குள், தொழில்நுட்பத் துறையில் செழிக்கத் தேவையான திறன்களையும் அறிவையும் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

Unicom TIC
Training & Innovation Centre
Skills Today, Success Tomorrow

**சனிக்கிழமை Unicom TIC அங்குரார்ப்பணம்**

★ மொத்தமாக 925,000 இலங்கை ரூபாய்கள் ஒரு மாணவருக்கு செலவாகும் பாடநெறிக்கு, தெரிவுசெய்யப்படும் அனைத்து மாணவர்களுக்கும் (120 மாணவர்கள்) புலமைப்பரிசில்களை வழங்குதல். முதற்கட்டமாக 100 மில்லியன் இலங்கை ரூபாய்களை இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

★ இக்கற்கை நெறியை நிறைவுசெய்யும் மாணவர்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்பு உறுதி செய்யப்படுகிறது. இதன் மூலமாக உள்நாட்டில் பொருளாதார சமூக மாற்றத்திற்குப் பங்களிக்க முடியும்.

★ தெரிவாகும் வறுமைக்கோட்டிற்கு கீழிருக்கும் மாணவர்கள் அனைவர்க்கும் வாழ்க்கைச்செலவை சமாளிக்க மேலதிக உதவித் தொகையாக மாதம் 15000 Blossoms Trust என்ற தொண்டார்வு நிறுவனத்தால் வழங்கப்படும்.

**அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெறும் இடம்:**
Northgate Hotel, 136 Station Rd, Jaffna
**காலம்:**
16 ஆம் திகதி,
16.00 மணி - 18.30 மணி

இந்நிகழ்வில், கலைநிகழ்வுகளுடன் இக்கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு:**
**1. W. Shantharuban, CoFounder and Excutive Director, whatsapp: +44 7 946 455421 2. Dr. Neil Anthonypillai, CoFounder & Chief Trainig and Innovation Director: + 94 767509324**

# சிப் அபகஸ், மன எண்கணிதப் போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற சபி அஹமட்




பிராந்திய ரீதியில் நடைபெற்ற சிப் அபகஸ் மற்றும் மன எண்கணிதப் போட்டியில் (SIP Abacus & Mental Arithmetic Competition) அக்கரைப்பற்று அப்துல் ஹமீட் சபி அஹமட் சம்பியன் பட்டத்தை வென்று சாதனை படைத்துள்ளார்.

அக்கரைப்பற்று கனிஷ்ட கல்லூரியில் தரம் 04 இல் கல்வி கற்கும் அப்துல் ஹமீட் சபி அஹமட் அக்கரைப்பற்று, காத்தன்குடி, மட்டக்களப்பு போன்ற இடங்களை உள்ளடக்கி பிராந்திய ரீதியாக காத்தான்குடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சிப் அபகஸ் மற்றும் மன எண்கணிதப் போட்டியில் சம்பியன் பட்டத்தை பெற்று அபகஸ் கற்பித்த ஆசிரியர்களுக்கும், பாடசாலைக்கும், பெற்றோருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

கடந்த வருடம் (2023) தேசிய ரீதியில் நடைபெற்ற அபகஸ் போட்டியில் இவர் மூன்றாம் இடத்தைப் பெற்று (Second Runner up) சாதனை படைத்திருந்தார். இம்மாணவர் அக்கரைப்பற்று அப்துல் ஹமீட், சுல்ஹாபானு ஆகியோரின் புதல்வர் ஆவார்.

**எம்.எல். சரிப்டீன்...**
*(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)*



# மனித வாழ்வை நெறிப்படுத்தும் நோன்பு

# ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

சர்வ வல்லமை படைத்த அல்லாஹுத்தஆலா யாவற்றையும் அறிந்தவனாவான். அந்த வகையில் மனிதனை புடம்போட்டு பக்குவப்படுத்துவதற்காகவும் அவனில் இறையச்சம் மேலோங்கச் செய்வதற்காகவும் அவன் நோன்பை கடமையாக்கியுள்ளான்.

'ஈமான் கொண்ட இறை விசுவாசிகளே! உங்களுக்கு இறையச்சம் வர வேண்டும் என்பதற்காக உங்கள் முன்னோர்கள் மீது கடமையாக்கப்பட்டது போன்று உங்கள் மீதும் நோன்பு விதியாக்கப்பட்டு இருக்கின்றது' (சூரத்துல் பகரா) என்று அல் குர்ஆன் குறிப்பிட்டிருக்கின்றது.

மனிதனின் நல்வாழ்வுக்கு இறையச்சம் மிகவும் இன்றியமையாதது. அதற்கு மனித உள்ளத்தில் இறையச்சம் மேலோங்க வேண்டும். ஏனெனில் மனிதனில் உள்ளம் அதிக செல்வாக்கு செலுத்தக்ககூடியதாகும். அதனால் தான் நபி (ஸல்) அவர்கள் ஒரு தடவை இவ்வாறு கூறினார்கள்.



'தெரிந்து கொள்ளுங்கள், உடலில் ஒரு சதைத்துண்டு உள்ளது. அது சீரடைந்துவிட்டால் முழு உடலும் சீரடைந்து விடும். அது கெட்டுவிட்டால் முழு உடலும் கெட்டு விடும். அதுதான் உள்ளம் (நபிமொழி) என்றார்கள். இது மிகவும் பிரபல்யமான நபிமொழி.

பொதுவாக ஒரு மனிதனைக்கு ஏற்படும் நோய்களை இரு வகைப்படுத்தலாம். ஒன்று உடல் சார்ந்தவை. மற்றையது உள்ளம் சார்ந்தவை. அதனால் உடல் சார்ந்த நோய்களுக்கு மருத்துவர்கள் வைத்தியம் செய்வது போன்று உள்ளம் சார்ந்த நோய்களுக்கும் வைத்தியம் செய்ய வேண்டும். அதற்கு ஆன்மீக வைத்தியம் மிகவும் அவசியமானது. இல்லாவிடில் நல்லது கெட்டதைப் பிரித்தறிய முடியாது பாவங்களின் மேல் மோகம்கொண்டவனாக மனிதன் மாறிவிடுவான்.

இது குறித்து நபி (ஸல்) அவர்கள், 'ஒரு மனிதன் ஒரு பாவத்தை செய்தால் அவனின் உள்ளத்தில் ஒரு கருப்பு புள்ளி விழுகிறது. அவன் திருந்தி பாவமன்னிப்பு கேட்டு விட்டால் அது அழிந்துவிடும். அன்றேல் அது அப்படியே இருக்கும். ஒரு பாவம் செய்யும்போது இன்னொரு கருப்பு புள்ளி விழும். இவ்வாறே அவன் செய்யும் பாவங்கள் அதிகரிக்க அதிகரிக்க கருப்பு புள்ளிகளாக விழுந்து விழுந்து ஒரு கட்டத்தில் உள்ளம் முழுக்க கருமையாகி விடும். அதன் பின்பு யார் எதைச் சொன்னாலும் அவனின் உள்ளம் அதை ஏற்றுக் கொள்ளாது. இதையே 'அவர்களின் உள்ளங்கள் துருப்பிடித்து விட்டன' என்று அல்குர்ஆன் கூறுகிறது' என்றார்கள்.

(ஆதாரம்: அஹமத்).

அது தான் உண்மை. உள்ளம் சீரடைந்து விட்டால் மனித வாழ்வே சீரடைந்துவிடும். அல்லாஹ்வின் எதிர்பார்ப்புக்கு அமைய அவன் வாழ்வை அமைத்துக் கொள்வான்.

மேலும் மனிதன் புரியும் பாவங்களை சொல் சார்ந்தவை, செயல் சார்ந்தவை, எண்ணம் சார்ந்தவை என மூன்றாக வகுக்கலாம். பிறருக்கு ஏசுதல், மனதைப் புண்படுத்தல், புறம் பேசல், கோள் சொல்லுதல் , பொய், புரட்டு இவ்வாறானவை ஒரு மனிதன் நாவினால் செய்யும் பாவங்களாகும் . பிறரை ஏமாற்றுதல், அநீதி இழைத்தல், அடித்தல், திருட்டு, அபகரிப்பு போன்றவை செயல் சார்ந்த பாவங்களாகும். கோபம், பொறாமை, வஞ்சகம் அபாண்டம், பெருமை, தலைக்கணம், ஆணவம், அகங்காரம், பிறரை மதிக்காமை, எடுத்ததற்கெல்லாம் சந்தேகம் போன்றவை கெட்ட எண்ணங்களின் வெளிப்பாடாக இடம்பெறும் பாவங்களாகும். இவை அனைத்துக்கும் அடிப்படை மனிதனின் இறையச்சத்தில் உள்ள குறைபாடேயாகும்.

அதனால் மனிதனைப் புடம் போட்டு நெறிப்படுத்திடக்கூடிய இறையச்சத்தை அவன் அடைந்து கொள்வதற்கு அல்லாஹ் ரமழான் நோன்பைக் கடமையாக்கியுள்ளான். மனிதனை ஆன்மீக ரீதியாகவும் லௌஹீக ரீதியாகவும் புடம் போட்டு பக்குவப்படுத்தக்கூடிய சக்தியை நோன்பு தன்னகத்தே கொண்டுள்ளது. அல்லாஹ்வின் கட்டளைகளுக்கும் நபிகளாரின் போதனைகளுக்கும் அமைய நோன்பை அமைத்துக் கொள்ளும் போது நிச்சயம் இறையச்சத்தை அடைந்து கொள்ளலாம். அதனை அல் குர்ஆனும் நபிமொழிகளும் தெளிவாக எடுத்தியம்பிக் கொண்டிருக்கின்றன.

அதேநேரம், நபி (ஸல்) அவர்கள், ஐங்காலத் தொழுகைகளும், வாராந்த ஜும்ஆகளும் வருடாந்த ரமழான் கால நோன்புகளும், அவற்றுக்கிடைப்பட்ட காலப்பகுதியில் புரியப்படும் பாவங்களுக்கு குற்றப்பரிகாரங்களாகி விடுகின்றன. ஆனால் பெரும்பாவங்கள் தவிர்த்து கொள்ளப்பட வேண்டும் என்பது நிபந்தனையாகும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

மற்றொரு சந்தர்ப்பத்தில், 'யாரொருவர் இறை நம்பிக்கையோடும், நன்மை கிடைக்குமென்ற ஆர்வத்தோடும் ரமழானில் நோன்பு நோற்கின்றாரோ, இரவில் நின்று வணங்குகின்றாரோ, அவ்வாறே லைலத்துல் கத்ர் இரவில் நின்று வணங்குகின்றாரோ இவ்வொவ்வொன்றுக்காகவும் அவர் முன் செய்த பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப் பட்டு விடுகின்றன' என்றும் (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்), நோன்புகளில் சிறந்தது ரமழான் நோன்பாகும். அதற்கடுத்தது முஹர்ரம் மாத நோன்பாகும். தொழுகைகளில் சிறந்தது கடமையான ஐங்காலத் தொழுகையாகும். அதற்கடுத்தது இரவுத் தொழுகை கியாமுல்லைல் தொழுகையாகும் என்றும் (ஆதாரம் : நஸாயி) நபி(ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

அதேவேளை அல்லாஹ் கூறுவதாக நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடும் போது, 'ஆதமின் மகன் செய்யும் நல்லறங்கள் அனைத்தும் அவனது நலனுக்காகவே... நோன்பைத் தவிர.. நோன்பு எனக்காக நோற்கப்பட்டது. அதற்கு நானே நற்கூலி வழங்குவேன், ஏனெனில் அம்மனிதன் எனக்காகவே அவனது பசியையும் தாகத்தையும், ஆசாபாசங்களையும் தியாகம் செய்துள்ளான்' என்று சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

(ஆதாரம்: புஹாரி).

மேலும், நோன்பு ஒரு கேடயமாகும். உங்களில் ஒருவர் நோன்பு நோற்றிருக்கும் வேளையில் துர்ச்செயல்களில் ஈடுபடுவதையும் கெட்ட வார்த்தைகளைப் பேசுவதையும் தவிர்த்துக் கொள்ளட்டும். எவரேனும் ஒருவர் நோன்பாளியை சண்டைக்கு அழைத்தால் நான் நோன்பாளி என்றுகூறி அவர் விலகிக் கொள்ளட்டும்' (ஆதாரம்: புஹாரி) என்றும், 'என் உயிர் எவன் வசமிருக்கின்றதோ அந்த அல்லாஹ்வின் மீது சத்தியமாக ஒரு நோன்பாளியின் வாயிலிருந்து (பசி மிகுதியால்) வெளிப்படும் வாடையானது அல்லாஹ்விடம் கஸ்தூரியின் வாடையை விடவும் சிறந்ததாகக் கருதப்படுகின்றது (ஆதாரம்: புஹாரி) என்றும் 'சில நோன்பாளிகள் இருக்கின்றனர். அவர்கள் நோற்ற நோன்பினால் அவர்களுக்கு மிஞ்சுவது பசித்திருந்ததையும், தாகித்திருந்ததையும் தவிர வேறெதுவுமில்லை. இன்னும் சிலர் இரவுநேரத்தில் நின்று வணங்குகின்றனர், எனினும் அவர்களின் வணக்கத்தில் (கால் கடுக்க) விழித்து நின்றதைத் தவிர வேறெதுவும் மிஞ்சுவதில்லை (ஆதாரம்: இப்னு மாஜஃ) என்றும் 'யார் நோன்பு நோற்ற நிலையில் வீண்பேச்சையும், கெட்ட செயல்களையும், அறிவீனமான செயற்பாடுகளையும் விடவில்லையோ அவர் பசித்திருந்ததிலும் தாகித்திருந்ததிலும் அல்லாஹ்வுக்கு எவ்வித தேவையும் கிடையாது, (ஆதாரம்: புஹாரி) என்றும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இவ்வாறு ரமழான் நோன்பு காலத்தில் மனிதனைப் புடம்போட்டு பக்குவப்படுத்துவதற்கான வழிகாட்டல்களும் போதனைகளும் அல் குர்ஆனிலும் நபிமொழிகளிலும் விரவிக் காணப்படுகின்றன. அவற்றின் வழிகாட்டல்களுக்கு அமைய ரமழான் நோன்பை அமைத்துக் கொள்ளும் போது நிச்சயம் இறையச்சத்தை அடைந்து கொள்ளலாம். அப்போது அல்லாஹ்வின் எதிர்பார்ப்புக்கு அமைய மனித வாழ்வு அமைந்திடும். அதனை எம்மிலக்காகக் கொள்வோம்.

மௌலவி
ஏ.ஜி.எம். ஜெலீல்...
(மதனி) விரிவுரையாளர், மஃஹதுஸ் ஸுன்னா அரபுக் கல்லூரி, காத்தான்குடி

# ரமழானை பயனுள்ளதாக்குவோம்

நாம் செய்யும் அனைத்து செயல்களும் எண்ணத்தைப் பொருத்தே அமைகிறது. நமது செயல்கள் அல்லாஹ்விடம் அங்கீகரிக்கப்படுவதற்கும் அதற்கு நன்மை கொடுக்கப்படுவதற்கும் நிய்யத்து தான் அடிப்படையாகும். அதன் அடிப்படையில் ரமழானை நாம் பயனுள்ளதாக கழிப்பதற்கு நமது நிய்யத்தை சீராக்கிட வேண்டும்.

இமாம் இப்னுல் முபாரக்(ரஹ்) அவர்கள், எத்தனையோ அற்பமான செயல்களைக்கூட நிய்யத் மிகப்பெரியதாக மற்றிவிடுகிறது. எத்தனையோ மிகப்பெரிய செயல்களைக்கூட நிய்யத் அற்பமானதாக மாற்றிவிடுகிறது' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

இமாம் ஸுஃப்யானுஸ் ஸவ்ரி(ரஹ்) அவர்கள், என்னுடைய நிய்யத்திற்கு நான் சிகிச்சை அளிப்பதற்கு சிரமப்பட்டதைப் போன்று வேறு எதற்கும் நான் சிரமப்பட்டதில்லை. ஏனெனில் எனது நிய்யத் அடிக்கடி புரண்டுகொண்டே இருக்கிறது' என்றுள்ளார்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'எல்லா செயல்களுக்கும் அடிப்படை நிய்யத்' என்றுள்ளார்கள். செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொருத்தே அமைகின்றன. ஒவ்வொருவருக்கும் அவர் எண்ணியதே கிடைக்கிறது. ஒருவரின் ஹிஜ்ரத் உலகத்தைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தால் அதையே அவர் அடைவார். ஒரு பெண்ணை நோக்கமாகக் கொண்டால் அவளை மணப்பார். எனவே, ஒருவரின் ஹிஜ்ரத் எதை நோக்கமாகக் கொண்டதோ அதுவாகவே அமையும்' என்று அன்னார் கூறியுள்ளார்கள்.

(ஆதாரம்: ஸஹீஹுல் புஹாரி)

'அல்லாஹ் கூறுகிறான் எனது அடியான் நன்மை செய்ய வேண்டுமென்று எண்ணினால் நான் அவனுக்கு நன்மையை எழுதிவிடுகிறேன்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம்)

அதனால் ரமழானில் தக்வாவை அடைய வேண்டுமென்று நிய்யத் கொள்ளவேண்டும். நோன்பின் நோக்கமே இறையச்சம் தான். அல்லாஹ் கூறுகிறான், 'நம்பிக்கையாளர்களே! உங்களுக்கு முன்னுள்ளவர்கள் மீது கடமையாக்கப்பட்டிருந்தது போல் உங்கள் மீதும் நோன்பு நோற்பது கடமையாக்கப்பட்டுள்ளது. அதனால் நீங்கள் இறையச்சமுடையவர்களாக ஆகக்கூடும்.

(அல்குர்'ஆன்: 2:183)

அல்லாஹ் இவ்வசனத்தில் இறையச்சமுடையவர்களாக ஆவீர்கள் என்று கூறாமல் ஆகக்கூடுமென்று கூறுகிறான். இதன்படி நமது நிய்யத்து தான் நாம் உண்மையான இறைச்சமுடையவரா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்கும். அதனால் பாவங்களை விட்டொழித்து எல்லா நிலையிலும் அல்லாஹ் நம்மை கண்காணிக்கிறான் என்ற இறையச்ச உணர்வை நம்மில் வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு இந்த ரமழான் நல்ல அடித்தளமாகும்.



அந்த வகையில் இக்காலப்பகுதியில் அல் குர்ஆனை அதிகமதிகம் ஓத வேண்டுமென்று நிய்யத் கொள்வது இன்றியமையாததாகும். அல்லாஹ் தன் அருள் மறையில், 'ரமழான் மாதம் எத்தகையதென்றால், அம்மாதத்தில்தான் மனிதர்களுக்கு முழுமையான வழிகாட்டியாகவும், மேலும் நேர்வழியை தெளிவுபடுத்தக்கூடியதும், சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்துக் காட்டக்கூடியதுமான அல்குர்ஆன் இறக்கியருளப்பட்டது. எனவே இனி உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ, அவர் அம்மாதம் முழுவதும் நோன்பு நோற்க வேண்டும் (2:185) என்று குறிப்பிட்டுள்ளான்.

'நபி (ஸல்) அவர்கள் மனிதர்களில் மிகப் பெரும் கொடையாளியாகத் திகழ்ந்தார்கள். (சாதாரண நாள்களை விட) ஜிப்ரீல் (அலை) அவர்கள், நபி (ஸல்) அவர்களை ரமழான் மாதத்தில் சந்திக்கும்போது நபி (ஸல்) மிக அதிகமாக வாரி வழங்கும் கொடையாளியாகத் திகழ்ந்தார்கள். ஜிப்ரீல் (அலை) அவர்கள் ரமழான் மாதத்தின் ஒவ்வொரு இரவிலும் நபி (ஸல்) அவர்களைச் சந்தித்து (அது வரை) அருளப்பட்டிருந்த) குர்ஆனை நினைவுபடுத்துவார்கள். இருவருமாகத் திருக்குர்ஆனை ஓதும் வழக்கமுடையவர்களாக இருந்தார்கள். தொடர்ந்து வீசும் காற்றை விட (வேகமாக) நபி(ஸல்) அவர்கள் நல்ல காரியங்களில் மிக அதிகமாக வாரி வழங்கும் கொடையாளியாகவே திகழ்ந்தார்கள்' என இப்னு அப்பாஸ்(ரழி) அறிவிக்கக்கூடிய ஹதீஸ் ஸஹீஹுல் புஹாரியில் பதிவாகியுள்ளது.

அதேநேரம் நபி (ஸல்) அவர்களின் மரணத்திற்கு முந்திய ரமழானில் அன்னார் இருமுறை அல் குர்ஆனை ஜிப்ரீல் (அலை) அவர்களிடம் ஓதி காட்டியுள்ளார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனால் நாமும் குர்ஆனை பலமுறை ஓதவேண்டுமென்று உறுதி கொள்வோம். அதிலும் குறிப்பாக குர்ஆனை பொருளுணர்ந்து படிப்பதில் கவனம் செலுத்துவோம். அத்தோடு இந்த ரமழான் மாதம் நன்மையின் மாதமாக விளங்குவதால் அதனை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்வோம்.

அப்துல்லாஹ்...

# அல்குர்ஆனின் மாதம்

நாம் ரமழான் மாதத்தை அடைந்துள்ளோம். ரமழானில் அல்குர்ஆன் இறக்கியருளப்பட்டதன் காரணமாக ரமழான் மாதம் சிறப்புப் பெறுகிறது.



அல்லாஹுத்தஆலா இம்மாதத்தைப் பற்றி வர்ணிக்கும்போது 'ரமழான் மாதம் எத்தகையதென்றால் அதில்தான் மனிதர்களுக்கு (முழுமையான) வழிகாட்டியாகவும் தெளிவான சான்றுகளைக் கொண்டதாகவும் (நன்மை தீமைகளைப்) பிரித்தறிவிப்பதுமான அல்குர்ஆன் இறக்கியருளப் பெற்றது' (ஸூரதுல் பகரா: 185) எனவும் 'நிச்சயமாக நாம் அதை (குர்ஆனை) கண்ணியமிக்க (லைலத்துல் கத்ர்) என்ற இரவில் இறக்கினோம்' (ஸூரதுல் கத்ர்: 01) எனவும் குறிப்பிடுகின்றான்.

நாம் அல்குர்ஆனை ஐந்து கோணங்களில் அணுக வேண்டியுள்ளது.

முதலாவது, அல்குர்ஆன் அல்லாஹ்வினால் அருளப்பட்ட வேதம் என நம்புவதாகும். அல்லாஹ் அல்குர்ஆனை கண்ணியப்படுத்தியுள்ளான். அதனை சுத்தமான நிலையில் தொடுமாறு நபியவர்கள் ஏவியுள்ளார்கள்.

இரண்டாவது, அல்குர்ஆன் ஓதப்படுவதை செவிமடுப்பதாகும். ஓதுபவருக்கு நன்மை கிடைப்பது போலவே கேட்பவருக்கும் நன்மை கிடைக்கின்றது.

இம்மாதத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் ஜிப்ரீல் அலைஹி ஸ்ஸலாம் அவர்களும் அல்குர்ஆனை ஓதிவருவதுடன் ஒருவருக்கொருவர் ஓதிக்காட்டுவார்கள்.

மேலும் நபி (ஸல்) அவர்கள் இப்னு மஸ்ஊத், அபூ மூஸா அல்அஷ்அரி ரழியல்லாஹு அன்ஹுமா ஆகியோர்களை ஓதுமாறு கேட்டு, செவிமடுத்துள்ளார்கள். அல்குர்ஆனை ஓதக் கேட்பவருக்கு அது மறுமையில் ஒளியாக அமையுமெனக் கூறி தூண்டியிருக்கிறார்கள். ஆதலால் வழமையை விட இம்மாதத்தில் அல்குர்ஆன் ஓதப்படுவதை அதிகமாகக் கேட்க வேண்டும்.

மூன்றாவது, அல்குர்ஆனை நாம் ஓதிவர வேண்டும். ஓதத் தெரியாதவர்கள் ஓதத் தெரிந்தவர்கள் ஓதுவதை செவியேற்பதோடு திக்கித் திக்கியாவது ஓத முயற்சிக்க வேண்டும். அதற்கும் நன்மை உண்டென நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

'அல்குர்ஆனை ஓதுங்கள். அது மறுமையில் ஓதியவருக்குப் பரிந்து பேசும்' என ஹதீஸ்கள் எடுத்தியம்புகின்றன. அல்குர்ஆனை ஓதும்போது அது தனக்கு அருளப்பட்டது போன்ற உணர்வுடன் ஓதவேண்டும். அல்குர்ஆனை ஓதும்போது அழுது கண்ணீர் வடியுங்கள். முடியாது போனால் அழுவதுபோன்று பாவனை செய்யுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அல்லாஹ்வின் வேதனை பற்றிய ஆயத்துக்களை ஓதும்போது பயத்தினாலும் அல்லாஹ்வின் அருள் பற்றிய ஆயத்துக்களை ஓதும்போது ஆனந்தத்தாலும் கண்ணீர் வடிக்கலாம். நபி (ஸல்) அவர்கள் அல்குர்ஆனை ஓதும்போது, கண்கள் கண்ணீர் வடிக்கும். இந்த உணர்வுடன் அல்குர்ஆனை ஓத நாமும் முயற்சிக்க வேண்டும்.

நான்காவது, அல்குர்ஆனை விளங்குவதாகும். அல் குர்ஆனை ஓதுவதுடன் குர்ஆனை விளங்குதலும் இடம்பெற வேண்டும். முதலாவது அருளப்பட்ட வசனம், 'இக்ரஉ பிஸ்மி ரப்பிகல்லதீ கலக் (உம்மைப் படைத்த இறைவனின் பெயரால் ஓதுவீராக)' என்று அருளப்பட்டதை சிந்தனையோடு நோக்க வேண்டும். ஓதுவீராக (இக்ரஃ) என்ற சொற்பிரயோகம் குர்ஆனை ஓதி விளங்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

ஆகவே அல்குர்ஆனை விளங்கும் நோக்கில் இம்மாதத்தை ஆக்கிக் கொள்ள வேண்டும். பல்வேறு மொழிகளிலுள்ள தர்ஜுமாக்களையும் தப்ஸீர்களையும் வாசிக்கலாம். அல்லது கூட்டாக அல்குர்ஆன் விளக்க வகுப்புக்களை நடத்தலாம்.

ஐந்தாவது, அல் குர்ஆனை நடைமுறைப்படுத்த வேண்டும். ஸஹாபாக்கள் அல் குர்ஆனின் ஆயத்துகளைக் கற்று அதனை செயல்படுத்திய பின்பே அடுத்த ஆயத்துக்களைக் கற்றுக் கொண்டதாக வரலாறுகளின் காணக் கிடைக்கின்றன. இதனால் தான் ஸஹாபா சமூகத்தை அல்குர்ஆனிய சமூகம் என பாராட்டுவர். ஆதலால் நாமும் அல்குர்ஆனைக் கற்று அதனை நடைமுறைப்படுத்துபவர்களாக மாற வேண்டும்.

ஆறாவது, அல்குர்ஆன் இந்த உலகில் மனித உள்ளங்களில் அது ஏற்படுத்திய தாக்கங்களை சிந்தித்துப் பார்க்க வேண்டும். குறிப்பாக உமர் இப்னு கத்தாப் (ரழி) அவர்களை இஸ்லாத்தினதும் நபி(ஸல்) அவர்களதும் பாதுகாவலனாக மாற்றிய பெருமை அல் குர்ஆனையே சாரும்.

ஒரு வழிப்பறிக் கொள்ளைக்காரராக இருந்த புழைல் இப்னு இயாழ் என்பவர் மிகப்பெரும் அறிஞராகுவதற்கு காரணம் ஓர் அல்குர்ஆனிய வசனம்தான்.

மேற்குறித்த அனைத்துப் பணிகளும் ரமழானுடன் சுருங்கி விடுவனவல்ல. முஸ்லிமுடைய வாழ்வு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியன. இதற்கான பயிற்சியை ரமழானில் பெற்றுக் கொள்வோம்.

முப்தி ஏ.எச்.எம். மின்ஹாஜ்...
(காஷிபி, மழாஹிரி) நிந்தவூர்

# அன்பும் பாசமும் பரிமாறப்படும் மாதம்



ரமழான் அது கண்ணியமான மாதம். அதில்தான் புனிதமிகு இறைவேதமான அல்குர்ஆன் அருளப்பட்டது. ஆயிரம் மாதங்களை விட சங்கைமிக்க லைலதுல் கத்ர் எனப்படும் இரவும் இம்மாதத்தில் தான் அமைந்துள்ளது. அதன் பகற்பொழுது நோன்பிலும் இராப்பொழுது வணக்கத்திலும் செலவிடப்படுகின்றது. அது பரஸ்பரம் அன்பும் பாசமும் பரிமாறப்படும் மாதம். அது பொறுமையையும் தக்வா என்கின்ற இறையச்சத்தையும் ஊட்டி வளர்க்கும் உன்னதமான மாதமாகும்.

ரமழான் பல நன்மைகளை வழங்குகின்றது. அவை தனிமனிதர்களையும் குடும்பங்களையும் தழுவியதாக காணப்படுகின்றது. ரமழான் மாதம் ஏற்படுத்தும் ஆன்மீகப் பயிற்சியும் பண்பாட்டு வளர்ச்சியும் தனித்துவமானவை.

தினமும் 1214 மணித்தியாலங்கள் என ஒரு மாத காலம் சுமார் 368 மணித்தியாலங்கள் நோன்பு நோற்பதில் ஒரு அடியானால் கழிக்கப் படுகின்றது. இதனால்தான் நோன்பு ஒரு மனிதனின் ஆன்மாவை நெறிப்படுத்தி நன்மை, பணிவு, பொறுமை போன்ற பண்புகளை ஏற்படுத்துகின்றது. பொதுவாக அனைத்து வணக்கங்களும் வெளிப்படையாக நிறைவேற்றப்படுகின்றன. உதாரணமாக தொழுகையில் அடியான் எழுந்து நிற்பதும் உட்காருவதும் குனிவதும் சிரம் தாழ்த்துவதும் போன்ற அசைவுகள் மக்கள் பார்வைக்கு எட்டுகின்றது. தவிர ஹஜ், ஸகாத் போன்ற வணக்கங்களும் ஏதோ ஒரு வகையில் வெளிரங்கமானவை.

ஆனால் நோன்பு இதற்கு முற்றிலும் மாற்றமானது. இது இறைவனுக்கும் அவனது அடியானுக்கும் மாத்திரம் தெரியுமான இரகசிய இபாதத்தாகும். அதனால்தான் நோன்பிற்குரிய கூலியை அல்லாஹ்வே உறுதிப்படுத்துகிறான். 'நோன்பைத் தவிர மனிதனது அனைத்து செயற்பாடுகளும் அவனுக்குரியவை. அது எனக்குரியது. அதற்கு நானே கூலி வழங்குவேன் என்று அல்லாஹ் குறிப்பிடுவதாக நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி)

அதனால் ரமழான் நோன்பை அல்லாஹ்வின் கட்டளைகளுக்கும் நபி (ஸல்) அவர்களின் போதனைகளுக்கும் அமைய அமைத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக ரமழான் அல்குர்ஆனின் மாதமாக இருப்பதால் அதனை ஓதுவதற்கும் விளங்குவதற்கும் அதன் போதனைகளை வாழ்வில் எடுத்து நடப்பதற்கும் உறுதி கொள்வது அவசியம். அதன் ஊடாக நற்பண்புகளையும் சீறிய ஒழுக்கத்தையும் உருவாக்கக்கூடியதாக அமையும் ரமழான். அல்லாஹ்வை திக்ர் செய்தல், குர்ஆன் ஓதுதல் தவிர வேறு விடயங்களில் நாவை ஈடுபடுத்தாது மௌனம் காத்தல், தேவை ஏற்படும் போது நல்லதை மாத்திரம் பேசுதல், பொய் கூறுதல், புறம் பேசுதல், கோள் சொல்லுதல் போன்ற துர்குணங்களிலிருந்து நாவைப் பேணுதல், நன்மையை ஏவுதல், தீமையை தடுத்தல் போன்ற பண்பாடுகள் மிக முக்கியமானவையாகும்.

அதனால்தான் நபி (ஸல்) அவர்கள், 'பொய்யுரைத்து அதன் அடிப்படையில் செயற்படுவதை விட்டு விடாதவர் உணவையும் குடிப்பதையும் விட்டு விடுவதில் அல்லாஹ்வுக்கு எந்த தேவையும் இல்லை'. (ஆதாரம்: புஹாரி)

ஆகவே அன்பையும் பாசத்தையும் பரிமாறப் படக்கூடிய வகையில் இம்மாதத்தை அமைத்துக் கொள்வோம்.

பிந்த் இஸ்மாயீல்...

# முச்சக்கரவரண்டி மற்றும் கார்களின் மின்கலங்களை சார்ஜ் செய்யும் நிலையமொன்று கொள்ளுப்பிட்டியில் திறந்துவைப்பு

மின்சாரத்தில் இயங்கும் முச்சக்கரவரண்டி மற்றும் கார்களின் மின்கலங்களை சார்ஜ் செய்யும் நிலையமொன்று கொள்ளுப்பிட்டியில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன இதனைத் திறந்து வைத்தார்.

குறுகிய காலத்தில் குறைந்த திறன் கொண்ட கார்கள், முச்சக்கர வண்டிகள் மற்றும் பிற மின்சார வாகனங்களை சார்ஜ் செய்யக்கூடிய வசதிகள் இந்த இடத்தில் நிறுவப்பட்டுள்ளன, மேலும் முச்சக்கர வண்டியை ஒரு மணி நேரத்திற்குள் முழுமையாக சார்ஜ் செய்யவும் இங்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கான பணப்பரிமாற்றங்களை கையடக்கத் தொலைபேசி செயலிகளின் ஊடாக இந்நிலையங்களில் செலுத்தவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.



# இன்றைய பலன்கள் (15.03.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
குடும்பத்தில் உள்ளவர்களுக்கு உடல்நிலைகள் சிறுசிறு கோளாறுகளை ஏற்படும். கடன் சுமையை குறைக்க வழி தேடுவீர்கள். பங்கு சந்தை வியாபாரத்தில் ஓரளவு லாபம் கிடைக்கும்

**ரிஷபம் :**
குடும்பத்தில் கலகலப்புக்கு குறைவிருக்காது சுப நிகழ்ச்சி ஒன்று திடீரென முடிவாகி உறவுகளுடன் இணைய வழிவகுக்கும்.

**மிதுனம்:**
மாணவர்கள் கல்வியில் மிகுந்த அக்கறை செலுத்த வேண்டிய காலகட்டம் இதுவாகும். வியாபாரிகள் தங்கள் வியாபாரத்தை மேலும் விரிவுபடுத்துவர்.

**கடகம்:**
பிரிந்து சென்ற உறவினர்கள் விரும்பி வந்து இணைவார்கள். இல்லத்தில் சுப காரியம் நடைபெற வழி வகுக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும்.

**சிம்மம்:**
பெண்களுக்கு ஆடை ஆபரண சேர்க்கை உண்டு. எதிர்பாராத இடமாற்றம் பதவி உயர்வு உத்தியோகத்தர்களுக்கு கிடைக்கக்கூடும்.

**கன்னி:**
பெண்கள் உடல் நலத்தில் அக்கறை செலுத்த வேண்டும். குடும்பத்தில் குதூகலம் கூடும். தொல்லைகளும் நன்மைகளும் கலந்தே காணப்படும்.

**துலாம்:**
பிள்ளைகளை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருங்கள். தடைப்பட்டு வந்த பாகப்பிரிவினை முடிவுக்கு வரும். பங்குச்சந்தையில் முதலீட்டை தவிர்ப்பது நல்லது.

**விருச்சிகம்:**
பிரிந்து சென்ற உறவினர் உங்களை தேடி வரக்கூடும். சுபகாரியம் முடிவாகும். பங்குச்சந்தை வியாபாரம் ஓரளவு லாபம் தரும்.

**தனுசு:**
பொருளாதார நிலை கட்டுக்குள் இருக்கும். குடும்பத்தில் கணவன் மனைவி இடையே இனிமையான சூழ்நிலை நிலவும்.

**மகரம்:**
சகோதர வழியில் கவலை ஏற்படும். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களை அனுசரித்தே செல்லுங்கள். குடும்பத்துடன் ஆன்மீகப் பயணம் செல்ல திட்டமிடுவீர்கள்.

**கும்பம்:**
ஆலய தரிசனம் செய்யும் பாக்கியம் பெறுவீர்கள். பங்குச் சந்தையில் அன்றாட நிலவரங்களை கவனித்து வந்தால் லாபத்தை ஈட்ட முடியும்.

**மீனம்:**
குடும்பத்தில் கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடு மறையும். சகோதரர்களில் மனக்கசப்பு ஏற்பட்டு விலகும். ஆன்மீகப் பயணம் அமைதி தரும் .

# களுத்துறை தமிழ் பாடசாலைகளின் பழைய மாணவர்கள் ஒன்றுகூடல்

களுத்துறை சுழற்சி நிருபர்

களுத்துறை மாவட்ட சகல தமிழ் பாடசாலைகளின் பழைய மாணவர்கள் ஒன்றுகூடல் எதிர் வரும் 2024 மார்ச் மாதம் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மத்துகம கலைமகள் தமிழ் வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

இதன் போது களுத்துறை மாவட்டம் முழுவதும் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படும் பெருந்தோட்ட தமிழ் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை, மாணவர்களின் கல்வி நிலை வளர்ச்சி, கலைக் கலாசாரம் சீரழிவு, விளையாட்டு துறையை ஊக்குவித்தல், மருத்துவம், சுகாதாரம், சட்டம் ஒழுங்கு, போக்குவரத்து வசதிகள் மற்றும் போதைப் பொருள் விழிப்புணர்வு தொடர்பில் பழைய மாணவர்களுடன் கலந்து ஆலோசித்து ஆராய்ந்து அதற்கான மேலதிக காத்திரமான சில நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் மேற்படி ஒன்றுகூடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆகையால் களுத்துறை மாவட்டத்தின் சகல பெருந் தோட்ட பகுதிகளையும் சேர்ந்த தமிழ் பாடசாலைகளின் பழைய மாணவர்கள் அனைவரும் தவறாது இந்த ஒன்றுகூடலின் போது கலந்து கொண்டு களுத்துறை மாவட்ட எதிர் கால தமிழ் சமூக இளைஞர் யுவதிகளின் நல் வளர்ச்சியில் பங்கேற்று சிறப்பிக்குமாறு ஏற்பாட்டுக் குழு கேட்டுக் கொண்டுள்ளது.

## நிர்மாணத்துறை பிரச்சினைகளுக்கு...

மற்றும் நடுத்தர அளவிலான ஒப்பந்தக்காரர்கள் மற்றும் நிர்மாணத் துறையில் ஈடுபட்டுள்ள தரப்பினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் தலைவர்கள் நிர்மாணத்துறை பிரதிநிதிகள் பலரும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், தெங்குக் கைத்தொழில் தொடர்பான உற்பத்திகளில் ஈடுபட்டுள்ள கைத்தொழில்துறையினருக்குமிடையிலான கலந்துரையாடலும் (13) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

தேசிய பொருளாதாரத்துக்கு தெங்கு கைத்தொழிலின் பங்களிப்பை அதிகரிப்பதன் மூலம் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட ஒரு போட்டித் தொழிலாக நாட்டில் தென்னைச் செய்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்ய வேண்டிய தன் அவசியத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். இலங்கையின் தேசிய தெங்குக் கைத்தொழில் சபையொன்றை நிறுவுவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

## உணவுப் பொருட்களின் விலைகள் குறைப்பு...

190 ரூபாவிலிருந்து 175 ரூபாவாகவும், பருப்பு கிலோ ஒன்றின் மொத்த விலை 350 ரூபாயிலிருந்து 285 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது. தற்போது தங்களிடம் போதுமான அளவு வெள்ளை சீனி, கோதுமை மா மற்றும் பருப்பு என்பன கையிருப்பில் உள்ளன. எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் நுகர்வோர் இந்த அத்தியாவசிய உணவுப் பொருட்களை எவ்வித தடையுமின்றி வாங்க முடியும் என்றும் இறக்குமதியாளர்கள் கூறினர்.

## காவன் ரத்நாயக்க நேற்று...

இந்த நியமனத்தை மத்திய வங்கி அங்கீகரித்துள்ளது. இதற்கு முன்னர் இலங்கை வங்கியின் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி றொனால்ட் பெரேரா பதவி வகித்ததுடன் நேற்று முன்தினம் அவர் அந்த பதவியிலிருந்து விலகினார். இதையடுத்தே புதிய தலைவர் நேற்று கடமைகளை பொறுப்பேற்றார்.காவன் ரத்நாயக்க, இதற்கு முன்னர் தேசிய அபிவிருத்தி வங்கி, துறைமுக அதிகார சபை, சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றில் தலைவர் பதவி வகித்தவர். அத்துடன் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தலைவராகவும் முகாமைத்துவ பணிப்பாளராகவும் இவர், பதவி வகித்துள்ளார். இவர் கார்கில்ஸ் சிலோன் பி எல் சி நிறுவனம் மற்றும் டயலொக் நிறுவனம் ஆகியவற்றிலும் முக்கிய பதவிகளை வகித்தவர்.

## மாணவர்களின் பாதுகாப்பை...

தொடர்பில் கல்வியமைச்சு மீண்டும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வலியுறுத்தியுள்ளது. அந்தவகையில், பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது, சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களின் பொறுப்பு என்றும் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. நாட்டில் தற்போது நிலவும் கடும் வெப்பம் காரணமாக பாடசாலை மாணவர்களை வெளி விளையாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதை தவிர்க்குமாறு கல்வியமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

கல்வியமைச்சின் கீழ் வரும் சகல பாடசாலைகள் மற்றும் மாகாண பாடசாலைகளின் கல்விப் பணிப்பாளர்களுக்கு இது தொடர்பில் மீண்டும் கடிதம் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## சபாநாயகருக்கு எதிரான...

நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற கட்டிடத்தில் நேற்று இடம்பெற்றுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தை எதிர்வரும் 19 மற்றும் 20ம் திகதிகளில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் மீதான வாக்கெடுப்பை 20ஆம் திகதி மாலை நடத்தவும் நேற்றைய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட 44 எதிர்க்கட்சி எம்பிக்கள் கையொப்பமிட்டுள்ளனர். அந்த நம்பிக்கை யில்லாப் பிரேரணை அண்மையில் பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகத்திடம் கையளிக்கப்பட்டிருந்தது.

நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைக்கு முரணாக நிறைவேற்றப்பட்டதாக எதிர்க்கட்சிகள் முன்வைத்த ஆட்சேபனையை புறக்கணித்து, ஆளும் கட்சியின் தேவைக்கு ஏற்ப அதன் சரத்துக்களை நிறைவேற்ற சபாநாயகர் இடமளித்தார் எனக் குற்றஞ் சுமத்தியே எதிர்க்கட்சிகள் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்துள்ளன.

## "மக்கள் போராட்டத்தின் எதிரொலி"...

நூல் நேற்று(14) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

இதற்கு முன்னர் வணக்கத்திற்குரிய முருத்தெட்டுவே ஆனந்த தேரர், 'இடைவிடாத போராட்டத்தின் உண்மைக் கதை', 'சிங்கள மருத்துவத்தின் மறைவு', 'நைடிங்கேள் குணாதிசயம்', 'ஜெனிவா நெருக்கடியின் எதிரொலிகள்', 'ரன் ஹிய' மற்றும் 'இருளுக்கு வெளியே' ஆகிய நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

## கெஹெலிய உட்பட 07 பேரின்...

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவை சிறைச்சாலை அதிகாரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியிருந்தனர். அத்துடன் நேற்று முன்தினம் (13) குற்றத்தடுப்பு விசாரணை திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட சுகாதார அமைச்சின் விநியோகப் பிரிவு பிரதிப் பணிப்பாளர் டாக்டர் டி.சுதர்சனவும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டிருந்தார்.

## தீ விபத்தினால் வீடுகளை இழந்த...

பாவனைக்காக கையளிக்கப்பட்டது. தலவாக்கலை ஒலிரூட் தோட்டத்தில் தீ விபத்தினால்பாதிக்கப்பட்டு தற்காலிக குடியிருப்புகளில் வசித்த குடும்பங்களுக்கு, குடிநீர், மின்சாரம், உட்கட்டமைப்பு உட்பட சகல வசதிகளுடன் கூடிய தனி வீடுகள் நேற்று கையளிக்கப்பட்டன. நீர்வழங்கல்,தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் நேற்று (14) வீடுகளை கையளித்தார்.

அத்துடன், அவர்களது ஒவ்வொரு வீட்டுக்கும் தனிப்பட்ட 'முகவரி' வழங்கப்பட்டு, வீடுகளுக்கான தபால் பெட்டிகளும் கையளிக்கப்பட்டன.

ஒலிரூட் தோட்டத்தில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தினால் பாதிக்கப்பட்டு தற்காலிக குடியிருப்புகளில் வாழ்ந்து வந்த 24 குடும்பங்களுக்கு தனி வீடுகளை அமைப்பதற்கான வேலைத்திட்டம் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு ஊடாக முன்னெடுக்கப்பட்டது. கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. எனினும், முழுமைப்படுத்தப்பட்ட வீடுகளே மக்களுக்கு கையளிக்கப்பட வேண்டுமென குறிப்பிட்டு, குடிநீர், மின்சாரம், வீதி உட்பட சகல உட்கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட வேண்டுமென அமைச்சர் துறைசார் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். இதன்பிரகாரம் முழுமைப்படுத்தப்பட்ட வீட்டுத் திட்டமே நேற்று கையளிக்கப்பட்டன.

## ரயில் ஆசனங்கள் ஒதுக்கீடு...

அதேவேளை, இதுவரைகாலமும் அரச ஊழியர்களுக்காக வழங்கப்பட்டு வந்த railway warrants இனி ஒன்லைன் மூலமாக பெற முடியுமென்றும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. இதற்காக எவ்வித மேலதிக கட்டணமும் அறவிடப்படமாட்டாதென்றும் அவ்வாறு பரப்பப்படும் தகவல்களில் உண்மை இல்லை என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அனைத்து வகையான ரயில் இருக்கைகளையும் முழுமையாக டிஜிட்டல் முறை மூலம் முன்பதிவு செய்யும் வசதியை ரயில்வே திணைக்களம் நேற்று (14) மாலை முதல் ஆரம்பித்தது. இதன்படி, www.seatreservation.railway.gov.lk என்ற இணையத்தளத்தில் அல்லது மொபிடெல், ஹட்ச் மற்றும் ஏயார்டெல் தொலைபேசி வலையமைப்புகள் ஊடாக 365 க்கு அழைப்பதன் மூலமும் 444 என்ற டயலொக் தொலைபேசி வலையமைப்புக்கு அழைப்பதன் மூலமும், டெலிகொம் தொலைபேசி ஊடாக 1265 என்ற இலக்கத்துக்கு அழைப்பதன் மூலமும் இந்தச் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும். மேலும், 'Sri Lanka Railways Reservation' என்ற தொலைபேசி செயலி ஊடாகவும் இருக்கை முன்பதிவு செய்யும் வசதி வழங்கப்பட்டுள்ளது.

## பொலன்னறுவையில்...(03 ஆம் பக்க தொடர்ச்சி)

வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு இழப்பீடு/சம்பளம்/காப்புறுதி தொடர்பான சேவைகள் சிரம வசன நித்தியத்தினால் பாடசாலை உபகரணங்கள் வழங்குதல் EPF/ETF தொடர்பான சேவைகள் தொழிற்பயிற்சி கற்கைகளுக்கான பதிவு (இலவசம்/கழிவு) தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சிக்கான பதிவு தொழில் முறை கௌரவத்திற்கு கருசருத் திட்டம் புதியதாக சிந்திக்கும் இளைஞர்களுக்கு SMART YOUTH சமூகத்தில் போதைப் பொருள் தடுப்பு திட்டங்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் உரிமைச் சட்ட விழிப்புணர்வு உத்தேச தொழில் பாதுகாப்பு சட்ட விழிப்புணர்வு என்பன குருநாகல் மாவட்டத்தினர்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுத்த 'ஜயகமு ஸ்ரீலங்கா' திட்டத்தில் 50க்கும் மேற்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் பங்குபற்றி இருந்தன என்பது குறிப்பிட்டத்தக்கதாகும். "என்னிலிருந்து ஆரம்பிப்போம்' "ஜயகாமு ஸ்ரீலங்கா'

"நேர்த்திமிக்க திறமையானவர்கள் " போன்ற திட்டங்கள் உள் நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலைகளை நாடிச் வந்த மக்கள் மாதத்தில் அதிக வரவேற்பைப் பெற்று இருந்தது.

இவ் அங்குரார்ப்பண நிகழ்வின் சீடா நிறுவனத்தினால் தொழில்முறைப் பயிற்சி உள்ளவர்களுக்கும் மற்றும் இல்லாதவர்களுக்கு அவர்களது அறிவு மட்டத்தை பரிசோதித்து சான்றிதழ்கள் வழங்குவதற்கான பதியுக்களும் மேற்கொள்ளப்பட்டன. இங்கு கருத்து தெரிவித்த அமைச்சர் மனுஷ நாணயக்கார அவர்கள் இச்சான்றிதலுக்கான நிதியை சர்வதேச தொழிலாளர் நிறுவனத்துடன் கலந்தாலோசித்து வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்துடன் இணைந்து வழங்க தயாராக உள்ளோம் என தெரிவித்தார். தொழில்முறைச் சான்றிதழ்கள் இருந்தால் நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில் புரியலாம் இதற்கான உரிமத்தை நாங்கள் வழங்குகிறோம். கட்டுமானத் தொழிலுக்கு நீங்கள் பணம் செலவிட தேவையில்லை. ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக அரசாங்கம், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் என்பன அதற்கான செலவை ஏற்க தயாராக உள்ளன.

ஏனைய தொழில்துறையினருக்கு சான்றிதழ்களைப் பெறுவதற்கு நாங்கள் கட்டணம் செலுத்த ஏற்பாடு செய்கிறோம்.

இது ஒரு முயற்சி ஆகும் என தெரிவித்தார்.

மேலும் நாடு திரும்பிய 12 தொழிலாளர்களுக்கு சுய தொழில் புரிய 50000 ரூபா உதவித் தொகை, அவ்வாறே தொழில்முனைவோராக இருக்கும் 09 பேருக்கு 50000 ரூபாய் உதவித் தொகை அங்கவீனமுற்றவர்களுக்கு 32 மூக்கு கண்ணாடிகள், மற்றும் ஒரு சக்கர நாற்காலி போன்றனவும் வழங்கப்படன நாட்டில் முறைசாரா தொழிற்துறையில் ஈடுபடும் அனைவரின் தொழிலுக்கும் கௌரவத்தை பெற்றுக் கொடுக்கும் "கரு சரு" திட்டத்தின் மூலம் NVQ சான்றிதழ் வழங்கப்பட்டது .

இன்னும் வெளிநாடுகளில் தொழில் புரியும் குருநாகல் மாவட்டத்தை சேர்த்தவர்களின் குடும்பங்களுக்கு பல்வேறு நலன்புரிசேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டன. 'ஜயகமு ஸ்ரீலங்கா' திட்டத்தின் இரண்டாம் நாள் திறமைமிக்க இளைஞர்களை உருவாக்குவதற்காக SMART YOUTH CLUB ஸ்தாபிக்கப்பட்டது.

அத்துடன் ஜனாதிபதி செயலகத்துடன் இணைந்து பத்தாயிரம் இளைஞர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தின் அனுசரணையில் இலவச தொழிற்பயிற்சிகளை வழங்கும் வேலைத்திட்டமும் நடைமுறைப்படுத்தப் பட்டது. ஆறாவது "ஜயகமு ஸ்ரீலங்கா ஸ்ரீலங்கா" நடமாடும் மக்கள் சேவை எதிர் வரும் (16 –17 ) திகதிகளில் தென்மை வாய்ந்த பொலன்னறுவை பொது விளையாட்டு மைதானத்தில் வெற்றிகரமாக நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## திருத்தப்படும்வரை அதனை...

ஹிங்குராங்கொடை, கல்கந்த பிரதேசத்திலுள்ள சுற்றுலா ஹோட்டலொன்றை ஏலத்தில் விடுவதற்கு நடவடிக்கை எடுத்ததாக அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க, நேற்றுமுன்தினம் அரசாங்க அனுசரணை வங்கியொன்று அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன்அரைவாசி நிர்மாணப்பணிகள் நிறைவடைந்துள்ள மேற்படி ஹோட்டலின் உறுதிப்பத்திரம் குறித்த வங்கியில் பிணையாக வைக்கப்பட்டு அந்த ஹோட்டலின் உரிமையாளரால் 80 இலட்சம் ரூபா கடன் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அந்தக் கடனை மேற்படி வங்கி 2019 ஆம் ஆண்டு வழங்கியுள்ளது.

எவ்வாறாயினும் ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் கொவிட் பரவல் உள்ளிட்ட நெருக்கடிநிலை காரணமாக குறித்த ஹோட்டலின் உரிமையாளர் கடனை முழுமையாக செலுத்துவதற்கு தவறியுள்ளதால் வங்கியானது அந்த குறித்த ஹோட்டலை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு தீர்மானித்தது. அவ்வாறு அந்த ஹோட்டலை 140 இலட்சம் ரூபாவுக்கு கேள்வி வைத்து ஏலத்தில் விடுவதற்கு குறித்த வங்கி நடவடிக்கை எடுத்தாலும் அது முடியாதுபோன காரணத்தால் அந்த வங்கி குறித்த ஹோட்டலைத் தம் வசப்படுத்திக்கொண்டுள்ளது.

பராடே சட்டத்தை 10 மாத காலத்திற்கு தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள பின்னணியில் இத்தகைய செயற்பாடு இடம்பெற்றுள்ளமை குறித்து ஹோட்டலின் உரிமையாளர் அதுதொடர்பில் தமது அதிருப்தியைவியிட்டுள்ளார்.

## ஆசிரிய உதவியாளர்களுக்கான...

ஆசிரிய உதவியாளர்களாக 2016 இல் உள்வாங்கப்பட்ட இவர்கள், 2019ஆம் ஆண்டு நியமனத்திற்கான சகல தகுதியினையும் பூர்த்தி செய்திருந்தனர். எனினும், கொவிட் 19 தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடியை காரணம் காட்டி இவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படாதிருந்தன. இவர்களுக்கு பத்தாயிரம் ரூபாவே கொடுப்பனவாக வழங்கப்பட்டது. இதனால், இவர்கள் எதிர்நோக்கிய அசௌகரியங்கள் தொடர்பிலும் செய்திகள் வெளியாகி இருந்தன.

இந்தநிலையில், நேற்று இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் போது, இவர்களது நியமனம் தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் கேள்வி எழுப்பியிருந்தார். இதன்போது, 138 ஆசிரியர் உதவியாளர்களுக்கான நியமனங்களை எதிர்வரும் 19 இல், வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மாகாண கல்வி செயலாளர் பதிலளித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

## சுற்றுலாத் துறை... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

இதன்படி, நாட்டின் முக்கிய சுற்றுலா நகரமாக காலி மாறும்.

உரமோ மருந்தோ இல்லை. இன்று அனைத்தும் இருக்கிறது. அதேபோன்று மக்கள் பணம் சம்பாதிக்கிறார்கள். மேலும், கறுவா விளைச்சலில் நாம் கவனம் செலுத்த வேண்டும். தேயிலை பயிருக்கு பொருத்தமான இடங்களில் தேயிலை பயிரிடுவதன் மூலமும், ஏனைய இடங்களில் கறுவா பயிரிடுவதன் மூலமும் அதிக வருமானத்தை ஈட்ட முடியும்.அதேபோன்று, இப்பகுதிகளுக்கு தொழில்நுட்ப கல்வி வழங்கும் நிறுவனங்களை கொண்டு வர திட்டமிட்டுள்ளோம். இந்த நடவடிக்கைகளால் காலி பெரும் அபிவிருத்தி அடையும் என நம்புகிறோம் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

"2021 ஆம் ஆண்டு நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்ட இந்த பூங்கா 14 ஏக்கர் தரிசு நிலத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரனவின் தலைமையில் இந்தக் கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டதோடு,நகர அபிவிருத்தி அதிகார சபையினால் இதற்கானதிட்டம் தயாரிக்கப்பட்டு, இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினால் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன .

## நெல் கொள்வனவுக்கு ரூ.50 கோடி...

கொள்வனவு நடவடிக்கைகளுக்காக நெல் களஞ்சிய சாலைகளை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட அமைச்சர், இதன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆகக் குறைந்தது இரண்டு நெல் களஞ்சிய சாலைகளை திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்பாக முதற்கட்டமாக ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் சிவப்பு நாட்டரிசி கொள்வனவு செய்யப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அதற்கிணங்க ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 3 நெல் களஞ்சிய சாலைகள் திறக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு...

தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

“ஆயிரம் ரூபா கிடைப்பது சிரமம், அது கிடைத்தால் பல்வேறு பிரச்சினைகள் சேர்ந்து வரும் எனவும், நாட்கூலி முறைமைக்கு பதிலாக நிரந்தர தீர்வொன்று அவசியம் எனவும் நாம் வலியுறுத்தினோம். அன்று நாம் பொய்யுரைத்தோம் எனக் கூறினர். ஆனால் இன்று என்ன நடக்கிறது?

எது எப்படி இருந்தாலும் எதிர்வரும் 30 நாட்களுக்குள் ஆயிரத்து 700 ரூபா கிடைக்கும். ஆனால் நிரந்தரமான தீர்வு பொறிமுறையொன்றே எமது இலக்காக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## முன்னாள் கிரிக்கெட் வீரர்...

இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அனுராதபுரம் மோட்டார் போக்குவரத்து பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் மொஹம்மட் நியாஸ் தெரிவித்தார். இந்த விபத்து நேற்றுக் 14 ஆம் திகதி காலை 7.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது. காரில் கிரிக்கெட் வீரர் லஹிரு திரிமான்னா அனுராதபுரம் நோக்கி பயணித்துள்ளார். அவருடன் குடும்பத்தினர் மூவர் காரில் பயணித்துள்ளனர். லொறி அனுராதபுரத்திலிருந்து கெகிராவ நோக்கிபயணித்துள்ளது. இச்சந்தர்ப்பத்திலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

# இலக்கியம் மற்றும் இலக்கிய செயற்பாடுகளில் தீவிர ஈடுபாடு காட்டி வரும் 'ஷாமென் நிஸாம்தீன்'

## பல விருதுகளும் பெற்று சாதனை புரிந்துள்ளார்



**கண்டி கட்டுகஸ்தோட்டையைச் சேர்ந்த திருமதி ஷாமென் நிஸாம்தீன் (கமறூன்) இலக்கியம் மற்றும் இலக்கியச் செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபாடு காட்டி வருகின்ற ஒருவர். அதேவேளையில் பெண் கிளப் அமைப்பின் செயலாளராக இருந்து இலக்கியச் செயற்பாட்டாளராகவும் ஈடுபாடு காட்டி வரும் இவர் பொண்ட் பெண்கள் அமைப்பின் உப தலைவியாகவும் இருந்து சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றார். இவற்றுக்கு மேலாக இவருடைய பணிகளுக்கு கிடைத்த பெறுபேறுகளும் விருதுகளும் சான்றுகளும் தன் பணியில் எத்தகைய உயர்வை அடைந்திருக்கிறார் என்பதற்கு பெரும் எடுத்துக்காட்டாக மிளிர்கின்றது. அவர் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.**



### உங்களுடைய ஆரம்ப கால இலக்கியப் பிரவேசம் குறித்து சொல்ல முடியுமா?

நான் கட்டுகஸ்தோட்டையில் பிறந்து வளர்ந்தேன். கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் மகளிர் கல்லூரியில் ஆரம்ப முதல் இடைநிலைக் கல்வி வரையிலும் அங்குதான் கற்றேன். தந்தையின் பெயர் ஓ. எம். மஹ்றூப். அவரை 'துரை' என்று செல்லமாக அழைப்பார்கள். தாயார் பெயர் சித்தி பௌசியா. அவர் சமீபத்தில்தான் மரணம் எய்தினார். இருவரும் காலம் சென்றுவிட்டார்கள். அவர்கள் தான் எங்களுக்கு முன்மாதிரியாக இருந்தார்கள் என்று சொல்லலாம். எழுத்துத் துறையில் மாத்திரமல்ல வாசிப்புத் துறையிலும் அவர்கள்தான் முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள்.

நாங்கள் முஸ்லிம்களாக இருந்தாலும் தமிழைச் சரியாக உச்சரிக்க வேண்டும் என்று சொல்லிக் காட்டி வீட்டில் அடிக்கடி பழக்க வழக்கத்தில் ஊட்டியவர்கள் எனது பெற்றோர்களே ஆவார்கள். எனது தாய் யாழ்ப்பாணத்துப் பிரதேச தமிழும் பேசுவார். அதேவேளையில் இந்தியத் தமிழும் நன்றாகப் பேசுவார். அவரைப் பின்பற்றி வாழ்ந்தமையினால்தான் எழுத்துத் துறையாக இருக்கட்டும் வாசிப்புத் துறையாக இருக்கட்டும் பேச்சுத் துறையாக இருக்கட்டும். இந்த மூன்று துறையிலும் நான் பிரகாசிப்பதற்கு முக்கிய காரணமாக இருந்தவர்கள் எனது பெற்றோர்களே.

எனது உம்மம்மா. உம்மாவின் வாப்பா ஆகிய இருவரும் காலையில் செய்திப் பத்திரிகை வாங்கி வாசிக்காமல் வேறு எந்தவொரு வேலையும் செய்ய மாட்டார்கள். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கையில் புத்தகமும் வாசிப்புமாகத்தான் இருப்பதை நான் காண்பேன். எனது குழந்தைப் பருவத்தில் அக்காலத்தில் அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிவாரண முத்திரை அல்லது கூப்பன் என்று சொல்லப்படும் அவற்றை எடுத்து ஏதாவது தமிழ் எழுத்துக்களை கீறி வைத்திருப்பேன் என்று அடிக்கடி தாயார் கூறுவார். அதுதான் எனது எழுத்துத்துறையின் ஆரம்பப்படி என்று கூறலாம்.



எங்கள் பாடசாலை மட்டத்தில் நடைபெறும் தமிழ் மொழி தினப் போட்டிகளில் பங்குபற்றுவேன். அதில் கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி எனப் பலற்றில் கலந்து கொள்வேன். ஆரம்ப முதல் பாடசாலையினை விட்டு விலகி வெளியேறும் வரை பேச்சு, கட்டுரை ஆகிய இரண்டு போட்டிகளில் முதல் இடங்களையே பெற்றுள்ளேன்.

ஒரு தடவை வானொலி அறிவிப்பாளர் மறைந்த ஏ. ஆர். எம். ஜிப்ரி நிகழ்ச்சித் தொகுப்புடன் மீலாத் தின போட்டி நடத்தப்பட்டது. 1985 களில் அவர் அப்போது குன்சாலை விவசாயக் கல்லூரியில் கல்வி கற்றுக் கொண்டிருந்தார். நான் க. பொ. த சாதாரணப் பரீட்சைக்கு கூட தோற்றவில்லை. அந்தப் போட்டியில் கலந்து கொள்வதற்காக நானும் சென்றிருந்தேன். பிரபல சர்வதேச அறிவிப்பாளர் பி. எச். அப்துல் ஹமீத் அவர்களுடைய குரல் பாணியிலேயே ஜிப்ரி அந்த நிகழ்ச்சியினைத் தொகுத்து வழங்கினார். எனக்கு வியப்பாக இருந்தது. என் நண்பியிடம் ஜிப்ரியின் குரல் குறித்து சிலாகித்துப் பேசினேன். நான் அதில் கவிதைப் போட்டியில் பங்குபற்றினேன். இஸ்லாமியச் செல்வி அரபா அவர்களும் இப்போட்டியில் கலந்து கொண்டார். அப் போட்டியில் எனக்கு மூன்றாம் இடம் கிடைத்தது.

பாடசாலையில் கல்வி பயிலும் போது நூலக வாசிகசாலையை நிறையப் பயன்படுத்தினேன். அதிகளவு நூல்கள் வாசிப்பேன். பாடசாலை வீட்டு வேலைகளை விட அதிகளவு கதைப் புத்தகங்களை வாசித்து முடிப்பதில்தான் அதிகம் கவனம் செலுத்தப்பட்டது. என்னுடைய எழுத்துப் பயணத்திற்கு காரணம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் ஆசிரியை சரவணமுத்து அவர்கள். அவர் தற்போது சுகயீனமுற்ற நிலையில் இருக்கின்றார்.



1983 ஜுலைக் கலவரத்தின் போது அவர்கள் எங்கள் வீட்டில் இருந்தார். அவரைத் தெரியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. அவர் எனது வாசிப்புத் துறைக்கு அதிகளவு பங்களிப்பு நல்கியவர். மோதிரக் கையால் குட்டுப்பட்டவர் என்று கூறுவதைப் போல ஒவ்வொரு தமிழ் உச்சரிப்புக்களையும் அழுத்தம் திருத்தமாக எனக்குச் சொல்லித் தருவார். அவ கூடத்தான் நான் பாடசாலைக்குச் செல்வேன். அவதான் புத்தகங்களை தெரிவு செய்து தருவார். நான் யமுனா ராணி மூன்று நாட்களில் வாசித்து முடித்தேன். அதைப் பார்த்து புதினப்பட்டு அவர் என்னை பாராட்டினார். சாண்டிலியன் கதைகள் என எல்லா சிறுகதைகளையும் நாவல்களையும் வாசித்தேன். இந்த வாசிப்பு கூடக் கூட எழுத வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது.

அந்த நேரத்தில் தினகரன் வாரமஞ்சரிப் பத்திரிகையில் கவியரசி என்ற பெயரில் நிறையக் கவிதைகள் எழுதினேன். தினகரன் வாரமஞ்சரியில் ஏ. எச். சித்தீக் காரியப்பர் செய்த 'கவிதைச் சோலை'ப் பகுதியில் தான் அதிகம் எனது கவிதைகள் பிரசுரமாகின. எனது எழுத்துத் துறைக்கு அதிகளவு களம் அமைத்துக் கொடுத்தது தினகரன் பத்திரிகையாகும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வட்சப் குழுமம் ஒன்று இருக்கிறது. அதில் அத்தனை பேரும் 1985 களில் இலக்கிய உலகிற்குள் பிரவேசித்த இலக்கிய நண்பிகளே இன்னும் உள்ளனர். நாங்கள் குழுமத்தில் கதைகளைச் சொல்லி அதன் இரசனைகளை பகிர்ந்து கொள்வோம். அப்பொழுது என்னுடைய கதையை சுவைத்து விட்டு சிறந்த கதையாசிரியர் என்று எமது குழாத்திலுள்ள நண்பிகள் புகழாரம் சூட்டுவார்கள்.

எங்களது வீட்டுக்கு அருகில் பொல்கொல்ல பல்கலைக்கழகத்திற்கு செல்லக் கூடிய எழுத்தாளர் நிந்ததாசன் ராஹில் போன்றவர்கள் இருந்தார்கள். பாடசாலை



கள் மட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக அவர்களிடம் சென்று உதவிகளை கேட்டுப் பெற்றுக் கொள்வோம். அதே அவர் துணைவியார் கரீமாவும் அயலில்தான் இருந்தார். அவர் தினகரனில் ஒரு தொடர் கதை எழுதினார். அவர் எழுதிய கதா பாத்திரங்களில் எங்கள் பெயர்களும் இடம்பெற்றிருந்தன. இவை எல்லாம் எங்களுடைய இலக்கிய வளர்ச்சிக்கு உதவியாக அமைந்தன. இந்த நினைவுகள் எல்லாம் மனதில் பசுமையாக இருக்கிறது. நாங்கள் மறக்கவில்லை. அக்கால கட்டத்தில் எதையும் சிரமத்தோடுதான் கற்றுக் கொள்வோம். ஆனால் இப்போது அவ்வாறு இல்லை. எல்லாம் இலகுவாக கையிலுள்ள கைபேசியின் மூலம் இலகுவாகப் பெற்றுக் கொள்கின்றோம்.






### நீங்கள் வானொலி அறிவிப்பாளராக வர வேண்டும் என்ற ஆர்வம் இருக்கவில்லையா?

நிச்சயமாக அதிகம் இருந்தது. ஒரு வைத்தியத்துறை அல்லது சட்டத்துறை அல்லது வானொலி அறிவிப்பாளராக வரவேண்டும் என்ற ஆர்வம் ஆசையும் எனக்கு அதிகம் இருந்தது. ஆனால் க. பொ. த உயர்தரப் பரீட்சை முடிந்த கையோடு திருமண பந்தத்தில் இணைந்து விட்டேன். அதற்குப் பின்னர் கணவனுடன் வெளிநாடு சென்று விட்டேன். நீண்ட காலம் வெளிநாட்டில் இருந்து வந்து அதில் ஈடுபட காலம் இடம்கொடுக்கவில்லை. எனினும் அடிமனதில் இந்த இலக்கியத் தாகம் இன்னும் இருந்து கொண்டுதான் இருக்கின்றது. அது இரத்தத்தில் ஊறி இருக்கின்றது தான் என்று சொல்லலாம். சமீபத்தில் கூட அபூ உபைதா மவ்ஜூத் என்னுடன் தொடர்பு கொண்டார். இருப்பினும் பிள்ளைகளுடைய படிப்புக்காக ஒரு கால கட்டத்தை தியாகம் செய்தேன். அவர்கள் தற்போது ஒரு நல்ல நிலைக்கு வந்து விட்டார்கள். நான் மீண்டெழுந்து வந்து வானொலியில் அறிவிப்பாளராக வர வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. ஆனாலும் அந்தக் காலத்தில் இருந்த குரல் வளம் இப்போது இல்லை.

### இன்றைய வாசிப்புத் துறை பற்றி உங்கள் கருத்து என்ன?

உண்மையிலேயே வாசிப்புத் துறையைப் பொறுத்த வரையில் தற்காலத்தில் வாசிப்பு பழக்க வழக்கம் அதிகமாகத்தான் இருந்து கொண்டு இருக்கிறது. சமூக வலைத்தளங்களில் எந்நேரமும் வாசித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். கைபேசியின் மூலம் தொடர்ந்து வாசித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். வாசிப்பு குறையவில்லை. ஆனால் வாசிப்பின் வகைகள்தான் மாற்றம் பெற்று இருக்கிறது. நாங்கள் அவசர கால யுகத்தில் இருக்கின்றோம். அந்தக் காலத்தில் வாசித்தவற்றை உள்வாங்கி கிரகித்து செயற்படக் கூடிய நிறைய காலம் நேரம் இருந்தது. அக்கால கட்டத்தில் தொடர்ந்து படிக்க வேண்டும் என்பது கிடையாது. இடை நிறுத்தி விடுவார்கள். இன்றைய கால கட்டத்தில் மேல் படிப்பு என்று கணிசமானளவு பிள்ளைகள் படிக்கின்றார்கள்.



நுனிப்புல் மேய்ந்தமாதிரி எல்லா விடயங்களையும் வாசித்து விட்டுச் சென்று விடுகின்றார்கள். அந்தக் காலத்தில் நாங்கள் எழுத வேண்டும். ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் நிறைய வாசித்தோம். இப்போது கட்டாயம் தேவை கருதிதான் வாசிக்கின்றார்கள்.

அந்தக் காலத்தில் தோன்றிய எழுத்தாளர்கள் அந்த நேரத்தில் டொமினிக் ஜீவாவின் மல்லிகை சஞ்சிகையினை எடுத்து வாசித்தோம். ரோணியோ சஞ்சிகைகள் வெளிவந்தன. அவற்றையும் விடாமல் தேடி வாசித்தோம். அந்த வாசிப்பு இப்போது கையில் இருக்கிறது. ஆனால் அவை முழுமையானவையாக வாசிக்கப்படுவதில்லை. அவற்றை வாசிப்பதற்கு நேரம் இல்லை. அதை வாசித்து வாழ்க்கைக்கு எடுத்துக் கொள்ள நேரம் போதாது. வேகமான வாழ்க்கையோட்டத்தில் ஆறுதலாக இருந்து வாசிப்பதற்கு இன்றைய தலைமுறையினர்களுக்கு சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. நேரப்பளு அதிகம். ஆதலால் வாசிப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது வாசிப்பு என்பது தேவை கருதித்தான் மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் அக்காலத்தில் வாசிப்பு ஒரு பொழுது போக்காகவும் தேவைக்காகவும் பயன்படுத்தப்பட்டது. அதாவது நிறைய வாசிக்க வேண்டும். அதை போன்று எழுத வேண்டும் என்ற ஆர்வம் அதிகம் இருந்தது.

எங்கள் வீட்டில் சாண்டிலியன், கல்கி, மணியன், அனுராதா ரமணன், சுஜாதா, லக்ஷ்மி, இந்துமதி வாசந்தி ஆகியோர்களுடைய புத்தகங்கள் இருந்து கொண்டேதான் இருக்கும். எந்த நேரமும் வீட்டில் அனைவரும் வாசித்துக் கொண்டுதான் இருப்பார்கள். தூங்கும் நேரமாக இருந்தாலும் வாசித்து விட்டுத்தான் தூங்குவார்கள். சாண்டிலியனின் நூல்களை வாசிப்பதன் காரணமாக பாடசாலையில் தமிழ் பாடத்தில் அதிக புள்ளிகளை நானே பெறுவேன். இந்த வாசிப்புத்தான் என்னை கல்வியின் மேல் அதிகம் தாகம் கொண்டதாக மாற்றியது.

### நீங்கள் ஆற்றி வருகின்ற சமூகப் பணிகள் குறித்துக் கூறுவீர்களா?

பொண்ட் என்ற பெயரில் சமூக அமைப்புடன் சேர்ந்து இயங்கி வருகிறேன். அதில் நான் உப தலைவியாக இருக்கிறேன். இதில் கம்பளை, நாவலப்பிட்டி, கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல பாகங்களைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். நோன்பு காலங்களில் வறுமைப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்குதல், நோயுற்றுள்ளவர்களுக்கு மருத்துவ உதவிகள் வழங்குதல், பாடசாலைகளுக்கு பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குதல், திடீரென ஏற்படும் வெள்ள அனர்த்தம் இயற்கை அழிவுகளுக்கு நிவாரண உதவிகள் வழங்குதல், சமீபத்தில் நாவலப்பிட்டியில் நடைபெற்ற வெள்ள





அனர்த்தத்தின் போது பெரியளவில் நாங்கள் நிவாரண உதவிகளை மேற்கொண்டோம். கொரோனா காலத்திலும் அதி தீவிரமாக இயங்கினோம். இந்த அமைப்பிலுள்ள அங்கத்தவர்களுடைய நிதி உதவியின் மூலமும் வெளிநாட்டிலுள்ளவர்களுடைய பங்களிப்பின் மூலமும் இப்படி பல உதவிகள் இந்த அமைப்பின் ஊடாக செய்து வருகின்றோம்.

### நீங்கள் இந்த முயற்சியின் மூலம் கிடைக்கப்பெற்ற சான்றுகள் பற்றி அறியத் தருவீர்களா?

தமிழ் மொழிப் போட்டி மீலாத் தினப் போட்டிகளில் பங்கு பற்றி மாவட்ட மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதை ஆக்கம் போன்றவற்றில் அதிகளவு சான்றுகள் பரிசுகள் எனப் பெற்றுள்ளேன். 2023 பெண் கிளப் மாநாட்டின் போது சிறந்த நிகழ்ச்சித் தயாரிப்பாளருக்கான விருது 2022 ஆம் ஆண்டி மாநாட்டின் போது பெண் கிளப் சஞ்சிகையினை முதன் முதலில் வெளிக்கொணர்ந்தமைக்கான விருது நிந்தவூர் தோப்புக் கண்டத்தில் வைத்து சிறந்து விருது வழங்கப்பட்டது. அதே ஆண்டில் சிறந்த நிகழ்ச்சித் தயாரிப்பாளருக்கான விருது, மடவளை




மதீனா தேசிய பாடசாலையின் விருது, 2023 சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கனடியன் விழித்தெழு அமைப்பினால் பெண் ஆளுமைக்கான விருது வழங்கப்பட்டது. 2023 இல் சர்வதேச மனித உரிமை அமைப்பினால் விருது வழங்கப்பட்டது. இவ்வாறு பல்வேறு அமைப்புக்களின் மூலம் விருதுகள் வழங்கி கௌரவித்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**நேர்காணல் அ. இம்மார்**


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன் 2024.03.13
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5418 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,304,332.00
ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 5 7 0 8 6 4

கொவிசெத — 3660 — 2024.03.13 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 69,810,228.16
ஆங்கில எழுத்து P — வெற்றி இலக்கங்கள் 24 61 71 80 — விசேட எழுத்து P — 00716

Mega Power — 1766 — 2024.03.13 — 68994 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 426,949,982.00
ஆங்கில எழுத்து Q — 02 — வெற்றி இலக்கங்கள் 04 23 35 64 — ரூ. 10,000,000.00 — ரூ. 10,000,000.00

VIP — 2024.03.13 — 0244 — ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 7 0 4 8 0 0 — G — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 26,833,939.80

ராசி சப லகன் — 2024.03.13 — 727 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,364,126.32
மிதுனம் — வெற்றி இலக்கங்கள் 03 04 07 50 — 22132 — 01

தன நிதானய — 1448 — 2024.03.13 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 83,936,068.64
ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 16 52 60 61 — விசேட எழுத்து B — 21696

# யாழ். பல்கலையின் 38ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 38ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நேற்றையதினம் வியாழக்கிழமை ஆரம்பமாகியது. பல்கலைக்கழக வேந்தர் வாழ்நாள் பேராசிரியர் சி. பத்மநாதன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. பட்டமளிப்பு விழா எதிர்வரும் சனிக்கிழமை வரை தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறவுள்ளன. அதில் 2 ஆயிரத்து 873 பேருக்குப் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் 46 தங்கப்பதக்கங்கள், 09 புலமைப்பரிசில்கள் மற்றும் 48 பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (யாழ்.விசேட நிருபர்)

## வடக்கின் உதயம்

## தலைமன்னார் மீனவர் நீரில் மூழ்கியதாலேயே மரணம்

### பிரேத பரிசோதனையில் தெரிவிப்பு

**(தலைமன்னார் விசேட நிருபர்)**

தலைமன்னாரில் மீன்பிடிக்கச் சென்று சடலமாக மீட்கப்பட்டவரின் மரணம் நீரில் மூழ்கியமையால் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த செவ்வாய்கிழமை (12) தலைமன்னார் பியர் மீன்பிடி துறையிலிருந்து வெளிக்கள இயந்திரப் படகொன்றின் மூலம் காலை ஏழு மணிக்கு மீனவர் ஒருவர் தனிமையில் வடகடலில் மீன்பிடிக்கச் சென்றுள்ளார்.

பின்னர் கரைக்கு வந்து பிடிக்கப்பட்ட மீன்களை கரையில் கொடுத்து விட்டு மீண்டும் பத்து மணிக்கு கடலுக்குச் சென்றுள்ளார்.

இதன்போதே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தலைமன்னார் பியர் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான மரியச் செல்வம் செங்கோல் பர்ணாந்து (வயது 55) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணையில் இவர் ஏற்கனவே இருதய நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் பிரேத பரிசோதனையில் நீரில் மூழ்கியமையாலேயே மரணம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சடலம் விசாரணைகளின் பின்னர் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.




மன்னார் மாவட்டச் செயலகமும் சமூக சேவைகள் திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த மன்னார் மாவட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான மாவட்ட தடகள விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் (13) மாலை மன்னார் நகரசபை மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் கலந்து கொண்டார். மேலும் மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (படம்: மன்னார் குறூப் நிருபர்)

## வலிகாமம் வடக்கில் விடுவிக்கப்பட்ட காணிகளுக்குள் திருட்டுக்கள் அதிகரிப்பு

**(யாழ்.விசேட நிருபர்)**

யாழ்ப்பாணம் வலி வடக்கு பிரதேசங்களில் அண்மையில் விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்குள் திருடர்கள் புகுந்து மரங்களை வெட்டி எடுத்து செல்வதுடன், வீட்டில் காணப்படும் பெறுமதியான பொருட்களையும் திருடிச் செல்வதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 33 வருடகாலமாக இராணுவ கட்டுப்பாட்டிலிருந்த சுமார் 67 ஏக்கர் காணி அண்மையில் காணி உரிமையாளர்களிடம் மீள கையளிக்கப்பட்டது.

விடுவிக்கப்பட்ட தமது காணிகளுக்குள் உடனே சென்று மீள் குடியேற முடியாத காணி உரிமையாளர்கள் சில நடைமுறை சிக்கல்களை எதிர்கொள்வதனால், விடுவிக்கப்பட்ட தமது காணிகள், வீடுகளை நேரில் சென்று பார்வையிட்டு திரும்புகின்றனர்.

விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்குள் காணப்படும் காணிகள் வீடுகளில் யாரும் இல்லாத நிலைமையை பயன்படுத்தி, திருடர்கள் அப்பகுதிகளுக்குள் புகுந்து, பயன்தரு மரங்களை வெட்டுவதுடன், வீட்டில் காணப்படும் ஜன்னல், கதவுகளின் நிலைகள், இரும்புக்கம்பிகள் உள்ளிட்டவற்றை களவாடி செல்கின்றனர். கதவுகள், ஜன்னல் நிலைகளை களவாடும் போது, வீடுகளையும் சேதமாக்குகின்றனர்.

திருடர்களிடமிருந்து தமது வீடுகளையும், காணிகளுக்குள் உள்ள பொருட்களையும் ஒரு சில வாரங்களுக்கு பாதுகாத்து தருமாறு இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரிடம் தாம் கோரிய போதிலும், அவர்கள் திருடர்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க பின்னடிப்பதாக காணி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## யாழ். பண்ணை கடலில் பாய்ந்த பொலிஸாரின் முச்சக்கர வண்டி

**(யாழ். விசேட நிருபர்)**

வேக கட்டுப்பாட்டை இழந்த பொலிஸாரின் முச்சக்கர வண்டி, கடலில் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

யாழ்ப்பாணம் ஊர்காவற்துறை வீதியில் நேற்றுமுன்தினம் இவ்விபத்து இடம்பெற்றது.

வீதியில் பயணித்த முச்சக்கர வண்டி, வேகக்கட்டுப்பாட்டை இழந்து பண்ணை கடலில் பாய்ந்து விபத்துக்குள்ளானது. கடலுக்குள் பாய்ந்த முச்சக்கர வண்டியை பெரும் சிரமத்துக்கு மத்தியில் பொலிஸார் மீட்டு கரை சேர்ந்தனர்.

## யாழில் கசிப்புடன் கைதான இளைஞனுக்கு 09 மாத சிறை

**(யாழ். விசேட நிருபர்)**

யாழில் கசிப்புடன் கைதான 19 வயது இளைஞனுக்கு 50 ஆயிரம் ரூபா தண்டமும் 09 மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கசிப்புடன் இளைஞன் கைது செய்யப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் யாழ்.மேலதிக நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

நீதிமன்ற விசாரணைகளின் போது, இளைஞன் தன் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதையடுத்து 50 ஆயிரம் ரூபா தண்டமும் 09 மாத சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

இளைஞன் இதற்கு முன்னரும் கசிப்புடன் கைதாகி, நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## யாழ். பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா

**(கரவெட்டி தினகரன் நிருபர்)**

யாழ்ப்பாணம், பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது.

பாடசாலை திறந்த வெளி அரங்கில் தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறவுள்ள நிகழ்வுக்கு பாடசாலை அதிபர் பரமலிங்கம் சந்திரபாகு தலைமை தாங்குகின்றார்.

நடைபெறும் முதலாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பருத்தித்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் கந்தசாமி கண்ணன் கலந்துகொள்கின்றார்.

நாளை சனிக்கிழமை இடம்பெறும் இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் சிவபாத சுந்தரம் சத்தியசீலன் கலந்துகொள்கின்றார். நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் மூன்றாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கனகசபை சத்தியபாலன் கலந்துகொள்கின்றார்.

## கடற்றொழிற்றுறை பெண்களுக்கு வாழ்வாதார உதவிகள்

**(சாவகச்சேரி விசேட நிருபர்)**



காரைநகர் ஜே/44 ஊரி கிராமத்தில் பெண் கடற்றொழிலாளர்களுக்கு சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தினரால் கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு 'பெண்களில் முதலீடு செய்வோம், முன்னேற்றத்தை விரைவுபடுத்துவோம்' எனும் தொனிப்பொருளில் சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையப் பணிப்பாளர் சட்டத்தரணி அம்பிகா சிறிதரன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளரும் பெண்கள், சமூக செயற்பாட்டாளருமான உதயனி நவரட்ணம், காரைநகர் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர், காரைநகர் பிரதேச செயலக உளவளத் துறை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

தெரிவு செய்யப்பட்ட 5 பெண்களுக்கு தலா நாற்பதாயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலை உள்ளிட்ட உபகரணங்கள் வழங்கப்பட்டன. அத்துடன் ஊரி கிராம பெண்களுக்கிடையே பணிஸ் உண்ணல் போட்டி, பலூன் உடைத்தல் போட்டி, கயிறு இழுத்தல் போட்டி உள்ளிட்ட போட்டிகளை நடாத்தி வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

## மலைச்சாரல்

## கடும் வரட்சி நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைவு

**(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)**

மலைநாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சியான காலநிலையை தொடர்ந்து நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் மிக வேகமாக குறைந்து வருகிறது. காசல் ரி,மவுசாகலை, கெனியோன், லக்ஸபான, நவலக்ஸபான, விமல சுரேந்திர உள்ளிட்ட நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் குறைந்துள்ளன.

மவுஸ்சா கலை நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட 23 அடி குறைந்து உள்ளது. காசல் ரீ நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட 22 அடி குறைந்து உள்ளது. நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் தாழ்ந்து காணப்படுவதனால் நீரில் மூழ்கி கிடந்த கட்டடங்கள் தற்போது தென்பட ஆரம்பித்துள்ளன.

நீர் ஓடைகள், அருவிகளின் நீர் வற்றிக் காணப்படுவதனால் சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்களின் மின் உற்பத்தியும் பாரிய அளவில் குறைவடைந்துள்ளன. பற்றைக் காடுகளுக்கு விசமிகள் மிருகங்களை வேட்டையாடுவதற்காகவும், பொழுது போக்குக்காகவும் தீ வைப்பதனால் நீரூற்றுக்கள் அற்றுப்போய் பாரிய குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான அபாயமும் காணப்படுகின்றன. எனவே காடுகளுக்கு தீ மூட்டுவதனை உடன் நிறுத்துமாறு பொது மக்களிடம் சூழல் ஆய்வாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொடர்ச்சியாக இந்த வரட்சியான காலநிலை காணப்படும் பட்சத்தில் விவசாயத்துறையும் பாதிக்கப்படுவதற்கான அறிகுறிகளும் காணப்படுகின்றன.



மாத்தளை யுனைடெட் காற்பந்தாட்டம் எகடமியினால் ஏற்பாடு செய்யப்பட்ட காற்பந்தாட்ட சுற்றுப்போட்டி மாத்தளை புட்சல் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் 16 வயதுக்கு கீழ் இடம்பெற்ற போட்டியில் வெற்றியீட்டிய அணித்தலைவர் மாத்தளை றோயல் கல்லூரி மாணவர் எம்.யூசுப் சனாஸ்'க்கு இந்நிகழ்வில் அதிதிகளாக கலந்து கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், இலங்கைக்கான சவூதி அரேபியா தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானி விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோகண திஸாநாயக்க ஆகியோர் இணைந்து வெற்றிக்கிண்ணத்தை வழங்குவதை படத்தில் காணலாம். (படம்; மாத்தளை சுழற்சி நிருபர்)



மலையக பெருந்தோட்டப் பாடசாலை மாணவர்களுக்கு மேலதிக சீருடைகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் அப்புத்தளையில் நடைபெற்றது. அப்புத்தளை தமிழ் மகா வித்தியாலயம், ஹல்துமுல்லை விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலயம், ஹல்துமுல்லை மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மாணவர்களுக்கு மேலதிக சீருடைகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கலந்துகொண்டு சீருடைகளைக் கையளித்தார். இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

## இறப்பர் தோட்டத்தில் வெட்டுக் காயங்களுடன் சடலம் மீட்பு

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

இறப்பர் தோட்டமொன்றில் இனந்தெரியாத நபரொருவரின் சடலம் வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளது.

உடுகாவ பிரதேச இறப்பர் தோட்டமொன்றில் இனங்காணப்பட்ட சடலம் நேற்று முன்தினம் பிரதேச மக்களால் அறிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது இவரிடம் சில பண நோட்டுகளும் பணம் வங்கியில் பணம் வைப்பு செய்யப்பட்ட பற்றுச்சீட்டுகளும் காணப்பட்டுள்ளன.

இறந்த நபரின் காலிலும் மார்பு பகுதியிலும் காயங்கள் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர். இறந்தவரின் அடையாளத்தை காண பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடுகின்றனர்.

## கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்தவுள்ள பயிற்சி பட்டறைக்கு விண்ணப்பம்

கொழும்பு தமிழ்ச் சங்கத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டு, சிறப்பு மிகு வளவாளர்களினால் சித்திரை மற்றும் வைகாசி மாதங்களில் நடாத்தப்படவுள்ள பின்வரும் பயிற்சி பட்டறைகள் மற்றும் பயிலரங்குகளில் இணைந்து கொள்ள ஆர்வம் உள்ளவர்கள் தமது விண்ணப்பங்களினை அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

1. கவிதைப் பயிலரங்கு
2. விவாத பயிலரங்கு
3. சிறுகதைப் பயிலரங்கு

(வார இறுதி நாட்களில், 01 நாள், 2 தினங்களில், சித்திரை மாதம்;)

4. நாடகப் பயிலரங்கும், நாடகப் பயிற்சி பட்டறையும்

(வார இறுதி நாட்களில், 10 தினங்கள், சித்திரை மற்றும் வைகாசி மாதங்களில்)

நாடகம் மற்றும் நடனத்தில் விருப்புடைய, 18 வயதுக்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகள், இசை அளிக்கை மற்றும் ஆர்வலர்கள் தமது விண்ணப்பங்களினை விருப்ப தேர்வினைக் குறிப்பிட்டு தமது முழுப்பெயர், பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், விலாசம், தொடர்பிலக்கம் போன்ற விவரங்களுடன், விண்ணப்பங்களினை

பொதுச்செயலாளர்,
கொழும்புத் தமிழ்ச் சங்கம்,
சங்க வீதி, வெள்ளவத்தை

எனும் முகவரிக்கு 22.03.2024 ஆம் திகதிக்கு முன் கிடைக்கச் செய்யவும்.

(தேர்வுகள் குறித்த முடிவுகள் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினால் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும்)



# புலமைக் கதிர்

தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
உதவி அதிபர், கொ/ புனித அன்னம்மாள் மகளீர் மகாவித்தியாலயம், கொழும்பு 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்

**I. கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளியுங்கள்.**

கடற்கரையில் சிறுவர்கள் பட்டாம் பூச்சிகளைப் போல் அங்கும் இங்கும் ஓடியாடி விளையாடுகின்றனர். சிறுவர்கள் விளையாடும் காட்சியைப் பெற்றோரும் அவர்களுடன் வந்திருந்த உற்றார் உறவினர்களும் இரசித்துக் கொண்டிருந்தனர். சூரியன் மெல்ல மெல்ல மறைந்து கொண்டிருக்கின்றது. பறவைகள் கூட்டங் கூட்டமாக தமது இருப்பிடங்களை நோக்கி பறந்து செல்கின்றன. நீலக்கடல் அமைதியாக காட்சி தருகின்றது. இன்று அலைகள் பொங்கியெழவில்லை காரணம் எனக்குப் புரியவில்லை.

01. இங்கு தரப்பட்டுள்ள உயர்திணை பலர்பால் பெயர்ச்சொல் இரண்டு தருக.

i. ………………………….. ii. ……………………………

02. இங்கு தரப்பட்டுள்ள இணைமொழிகள் இரண்டு

i. ………………………….. ii. ……………………………

03. ஒத்தகருத்து எழுதுக.

i. கடல் - ……………………. ii. பறவை - ……………………………

04. இங்கு இடம்பெற்றுள்ள பெயர் அடைமொழி ஒன்றை எழுதுக.

…………………………………………………………………………………

05. இங்கு சிறுவர்கள் ஓடியாடி விளையாடுவது எதற்கு உவமிக்கப்பட்டுள்ளது?

…………………………………………………………………………………

06. கடல் அலைகள் எவ்வாறு காட்சியளித்தன?

…………………………………………………………………………………

07. வெற்றிடத்துக்குப் பொருத்தமான வினைச் சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

i. நானும் அப்பாவும் சந்தைக்குச் ……………………… (சென்றோம் / சென்றேன்)

ii. என்னால் கட்டுரை ……………………………… (எழுதப்பட்டது / எழுதியது)

iii. சனக்கூட்டம் மெதுவாகக் கலையத் …………..... (தொடங்கியது / தொடங்கின)

08. கீழ்வரும் வாக்கியத்துக்குப் பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.
i. பெரியவரே கதிரையில் அமர்ந்து ஓய்வெடுங்கள்

…………………………………………………………………………………

09. வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

i. குருவி – கீச்சிடும் என்பது போல் தவளை ……………… (கத்தும் / கரையும்)

ii. வாழையின் இளையது குட்டி – மாவின் இளையது ………..(பிள்ளை / கன்று)

10. தனிச் சொல்லை எழுதுக.
i. ஒரே பாடசாலையில் ஒன்றாக படித்தவர் - ……………………………………

ii. ஐம்பதாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா - ……………………

11. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் **(பிழை)** எனவும் எழுதுக.

i. யானைகள் கூட்டங் கூட்டமாக வாழ்கின்றது ( )

ii. வரிக்குதிரைகள் குதிரை இனத்தைச் சேர்ந்தது ( )

12. பின்வரும் வாக்கியங்கள் அறிவித்தலா? அறிவுறுத்தலா? என புள்ளிக் கோட்டில் எழுதுக.
i. உங்கள் சுட்டெண்ணை இந்த அடைப்புக்குள் எழுதுக (…………………………)

ii. கண்ட கண்ட இடங்களில் குப்பைகளை வீச வேண்டாம் (……………………..)

13. பின்வரும் பழமொழியில் இடைவெளியைப் பூரணப்படுத்துக.

i. தவளையும் தன் ………………………… கெடும்.

ii. இக்கரை மாட்டுக்கு அக்கரை ……………………

14. பின்வரும் பாடலில் வரும் இடைவெளியை நிரப்புக.

i. அப்பா என்னை ……………………… சென்றார் அங்கு ……………………..

ii. பொல்லா ………………………… புனுகுப் பூனை ………………………...

**II.**

15. பின்வரும் பிராணியின் தொனியினை எழுதுக.

i. கரடி உறுமும் என்பது போல யானை …………………………………………

16. இளமைப் பெயரை எழுதுக.

i. நெல் ……………………………… ii. கீரி ……………………………..............

17. பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ் சொல்லை எழுதுக.

i. ஹிச ……………………………… ii. புஸ்தகாலய ……………………………

18. இங்கு தரப்பட்டுள்ள சொற்களை சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.
i. This / my / is / Father - ……………………………………………………………

19. தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ் சொற்களை எழுதுக.

i. Rabbit - ………………………….. ii. Home - ………………………….

20. பின்வரும் எண்கோலத்தில் வெற்றிடத்திற்கு வரவேண்டிய இலக்கத்தை எழுதுங்கள்

………, 33, 38, 43, 48

21. வட்டத்தில் உள்ள இலக்கங்களில் பெரிய எண்ணிற்கும் சிறிய எண்ணிற்கும் இடையே உள்ள வித்தியாசம் எவ்வளவு?

(8, 6, 0)

……………………………………………………

22. இந்த எண் அட்டைகளின் அடிப்படையில் பெரிய எண்ணை அமைக்கக்கூடிய அட்டை எது?

| A | B | C |
|---|---|---|
| 1 4 | 6 1 | 3 5 |
| 3 2 | 5 0 | 1 2 |

……………………………………

23. சாந்தன் விலைக்கு வாங்கிய பொருட்களின் விலைச்சிட்டை கீழேகாட்டப்பட்டுள்ளது.

| பொருள் | விலை |
|---|---|
| புத்தகப்பை | ரூ. 560.00 |
| புத்தகம் | ரூ. 225.00 |
| நிறப்பெட்டி | ரூ. 95.00 |

i. விலைச்சிட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்தத் தொகையை செலுத்த தேவையான பணம் எவ்வளவு? …………………………………………………..
ii. மேலுள்ள மொத்த பணத்தொகையை செலுத்த வியாபாரியிடம் 1000.00 ரூபா தாளொன்றைக் கொடுத்தால் மிகுதியாக எவ்வளவு பணம் கிடைக்கும்? …………..

24. 625 பிள்ளைகளை 5 குழுக்களாகப் பிரித்தால் ஒரு குழுவில் இருக்கும் பிள்ளைகள் எத்தனை?

…………………………………………………………………………………

25. கரீமின் நிறை 20kg 750g ஆகும். கரீமின் அப்பா கரீமை விட மூன்று மடங்கு நிறை உடையவராயின் அப்பாவின் நிறையைக் கண்டுபிடியுங்கள்?

…………………………………………………………………………………

26. வெற்றிடத்திற்கு பொருத்தமான சொல்லை எழுதுங்கள்.

i. கனவுரு ஒன்றில் ……………… முகங்கள் இருப்பது போல், சதுரமுகி ஒன்றில் ……………….. முகங்கள் இருக்கும்.

27. அருகிலுள்ள கடிகாரத்தில் காட்டப்பட்டுள்ள நேரத்தை விட இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னுள்ள நேரத்தை எழுதுங்கள்



……………………………………………………………

28. வகுப்பொன்றில் மாணவர்கள் விரும்பும் செல்லப்பிராணிகள் பற்றிய வரைபு கீழே காட்டப்பட்டுள்ளது.




i. முயலை விரும்பும் மாணவர்களை விட இரண்டு மடங்கு மாணவர்கள் அணிலை விரும்புகின்றனர். அந்த அளவை வரைபில் குறித்துக் காட்டுங்கள்.

ii. வகுப்பிலுள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

………………………………

29. ஐந்து பாடசாலைகளில் உள்ள பிள்ளைகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| பாரதி வித்தியாலயம் | கம்பன் கல்லூரி | சாஹிரா வித்தியாலயம் | நூராணியா வித்தியாலயம் | சரஸ்வதி கல்லூரி |
|---|---|---|---|---|
| 1207 | 733 | 2010 | 642 | 2410 |

i. கம்பன் கல்லூரி மற்றும் சரஸ்வதி கல்லூரி ஆகியவற்றில் கற்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? ………………………………………

ii. பாரதி வித்தியாலயத்தை விட சரஸ்வதி கல்லூரியில் எத்தனை மாணவர்கள் அதிகமாக கல்வி கற்கின்றனர்? ……………………………………………

**III. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

30. மணல், களிமண், பரல் அடங்கிய தரையில் தொடர்ச்சியாக பெய்யும் மழையின் போது காணக்கூடிய மாற்றம்
i. இடத்துக்கிடம் நீர் நிரம்பியிருத்தல்.
ii. மண்ணரித்து கால்வாய்கள் தோன்றியிருத்தல்.
iii. தாவரங்கள் ஈரலிப்பாக இருத்தல்.

31. மண்ணை பரிசோதனை செய்வதற்காக நீர் நிரம்பிய பாத்திரத்தினுள் மண்ணை இட்டு கலக்கிய பின் சிறிது நேரத்தில் அவதானிக்கும் போது பாத்திரத்தின் அடியில் காணப்படுவது,
i. களிமண் ii. உக்கல்கள் iii. பரல்கள்

32. “வானிலிருந்து விழும் ஒரு நீர்த்துளியேனும் பயன்படுத்தாமல் கடலைச் சென்றடைய விடமாட்டேன்” எனக் கூறிய மன்னன்
i. துட்டகைமுனு ii. மகாசேனன் iii. மகா பராக்கிரமபாகு

33. சரியான கூற்றைத் தெரிவு செய்க.
i. இலங்கையின் வடக்கே மாலைத்தீவு அமைந்துள்ளது.
ii. இந்தியாவின் தெற்கே இலங்கை அமைந்துள்ளது.
iii. இலங்கைக்கு தெற்கே அவுஸ்திரேலியா அமைந்துள்ளது.

34. எமது நாட்டின் பிரதான வர்த்தக நகரம் அமைந்துள்ள மாகாணம்
i. சப்பிரகமுவா மாகாணம் ii. மத்திய மாகாணம் iii. மேல் மாகாணம்

35. எமது நாட்டில் அதிகமாக நிகழும் இயற்கை அனர்த்தம்
i. வெள்ளப்பெருக்கு ii. சூறாவளி iii. சுனாமி

36. இரவு வேளைகளில் வடக்குத் திசையை அறிந்து கொள்ள உதவுவது
i. பெருங்கரடி ii. தென்சிலுவை iii. சிம்மம்

37. மழைக் காலங்களில் அதிகளவில் பெருக்கமடையும் பிராணி
i. நுளம்பு ii. கறையான் iii. வண்டு

38. கறியுப்பு விரைவாகக் கரைவது
i. குளிர் நீரில் ii. சுடு நீரில் iii. மழை நீரில்

39. பண்டைய கற்பாலம் காணப்படும் மாவட்டம் எது?
i. பொலன்னறுவை ii. கண்டி iii. அநுராதபுரம்

40. விருந்தினருக்கு வெற்றிலை வழங்கி வரவேற்பவர்கள்
i. தமிழ் மக்கள் ii. சிங்கள மக்கள் iii. கிறிஸ்தவ மக்கள்

41. வேடுவரின் கலாசார நடனம்
i. கிரி கொரங்க நடனம் ii. உடரட்ட நடனம் iii. கண்டிய நடனம்

42. நெற்கதிரிலிருந்து வைக்கோலைப் பிரித்தெடுக்க உதவுவது
i. குப்பைவாரி ii. அரிவாள் iii. வேலைக்காரன் கம்பு

43. சித்திரக்குன்றம் என அழைக்கப்படும் இடம்
i. யாப்பகூவ ii. சீகிரியா iii. எம்பக்க தேவாலயம்

(10ஆம் பக்கம் பார்க்க)

(09 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

44. தாவரங்களில் துவாரமிட்டு தங்கி வாழும் பறவை
i. கிளி ii. மரங்கொத்தி iii. மீன்கொத்தி

45. விரைவாக முளைக்கும் வித்து எது?
i. பாகல் ii. கடுகு iii. பயறு

46. பற்களில் நஞ்சைக் கொண்டுள்ள பிராணி
i. தேள் ii. குளவி iii. பாம்பு

47. நீரினால் பரவும் நோய்
i. கொள்ளை நோய் ii. விசர் நாய்க்கடி iii. நெருப்புக் காய்ச்சல்

48. கருங்கற்களில் செதுக்கல் வேலையை அதிகமாகக் கொண்டு காணப்படும் இடம் எது?
i. எம்பக்க தேவாலயம் ii. யாப்பகூவ iii. சீகிரியா

49. தென்னையின் குருத்தோலைகளை உணவாக உட்கொள்ளும் விலங்கு
i. கருவண்டு ii. மரங்கொத்தி iii. கிளி

50. கல்சியம் அதிகமாக உள்ள உணவுப் பொருள் எது?
i. மீன் ii. பால் iii. முட்டை

51. இலங்கை நாட்டில் இயற்கையாகக் கிடைக்கும் வளம்
i. காரியம் ii. வெள்ளி iii. வெண்கலம்

52. கலாவாவி குளத்தைக் கட்டுவித்த மன்னன் யார்?
i. தாதுசேனன் ii. மகாசேனன் iii. பண்டுகாபயன்

53. இலங்கையின் தேசப்படத்தில் புகையிரதப் பாதையை குறித்துக் காட்ட பயன்படும் நியம நிறம்?
i. கறுப்பு ii. சிவப்பு iii. பச்சை

54. உலகில் மிக நீளமான நதி
i. நைல் நதி ii. அமேசன் நதி iii. குவாங்கோ நதி

55. மரப்பலகையில் துவாரம் இடுவதற்குப் பொருத்தமான உபகரணம்
i. உளி ii. சுத்தியல் iii. கைவாள்

56. உந்துருளிக்காக அனுமதிப் பத்திரம் பெறச் செல்ல வேண்டிய இடம்
i. மாவட்டச் செயலகம் ii. பிரதேச செயலகம் iii. மாநகர சபை

57. திசையை அறிவதற்கு நாம் பயன்படுத்தக் கூடியது
i. இரும்புத்துண்டு ii. காந்தத்துண்டு iii. செப்புத்துண்டு

58. பாடசாலைக்கு கிடைக்கப்பெறும் பண்டங்கள், உபகரணங்களைப் பதியும் பதிவேட்டின் பெயர்
i. பாடப்பதிவு ii. வரவுப்பதிவு iii. பொருட்பதிவு

59. சாணைப்பிடித்து பயன்படுத்தப்படும் பொருள்
i. கத்தி ii. அரம் iii. திருகாணிச் செலுத்தி

60. நாம் உண்ணும் உணவுகள் உடலுக்கு சக்தி தருதல், உடலை வளர்த்தல், நோயிலிருந்து பாதுகாத்தல் போன்றவற்றிற்கும் துணைபுரியும். ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ உணவு வகைகளால் மாத்திரம் முடியாது **"சுத்தம் எம்மை ஆரோக்கியமாக்கும்"** என்ற தலைப்பில் 3 வாக்கியங்கள் எழுதுங்கள்.

.......................................................................................

.......................................................................................

.......................................................................................

## கடந்த வார (08.03.2024) வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01. 3 | 11. 2 | 21. 1 | 31. 1 |
| 02. 2 | 12. 1 | 22. 1 | 32. 1 |
| 03. 2 | 13. 2 | 23. 2 | 33. 2 |
| 04. 1 | 14. 3 | 24. 3 | 34. 1 |
| 05. 2 | 15. 1 | 25. 3 | 35. 3 |
| 06. 3 | 16. 2 | 26. 1 | 36. 3 |
| 07. 3 | 17. 3 | 27. 3 | 37. 1 |
| 08. 1 | 18. 2 | 28. 2 | 38. 3 |
| 09. 2 | 19. 2 | 29. 1 | 39. 2 |
| 10. 3 | 20. 1 | 30. 2 | 40. 3 |

# கிழக்கின் குரல்



# உலக வங்கியின் நிதி அனுசரணையுடன் வவுணதீவு பாலம் நிர்மாணிப்பு



**கல்லடி குறூப் நிருபர்**

கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவருமாகிய சிவநேசதுரை சந்திரகாந்தனினால் வவுணதீவில் நிர்மாணிக்கப்பட்ட பாலம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன அமைச்சின் காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சி நிரல் அணுகுமுறை திட்டத்திற்கு அமைவாக உலக வங்கியின் நிதி அனுசரணையுடன் வவுணதீவு முல்லாமுனை பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட இப்பாலம் நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாக மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டது.

உன்னிச்சை நீர்ப்பாசன வலது கரை வாய்க்கால் இற்கு மேலாக சுமார் 6 மில்லியன் செலவில் இப்பாலம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவருமாகிய சிவநேசதுரை சந்திரகாந்தன் கலந்து கொண்டு விளம்பர பெயர் பலகையை திறந்து வைத்தார்.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய நீர்ப்பாசன பணிப்பாளர் என்.நாகரெத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் சத்தியானந்தி நமசிவாயம், நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள், இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேக செயலாளர்கள், விவசாய பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

அதேவேளை றூகம் பிரிவுக்குட்பட்ட உன்னிச்சை திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள நாவற்காடு வாய்க்கால் புனரமைப்பு நிகழ்விலும் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

# இரு பிள்ளைகளை கொலை செய்து தற்கொலைக்கு முயற்சித்த தந்தை

## மருதமுனையில் இடம்பெற்ற கொடூரம்!

**பெரியநீலாவணை, அம்பாறை, மாளிகைக்காடு நிருபர்கள்)**

மருதமுனை,பெரியநீலாவணை பொலிஸ் பிரிவில் ஒரே குடும்பத்தைச் சேர்த்த 02 பேர் கழுத்து வெட்டப்பட்டு சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

ஒருவர் கழுத்து வெட்டப்பட்டு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

பதுறுத்தீன் முகம்மட் றிகாஸ் என்ற இளைஞர் ஒருவரும் (வயது22), பதுறுத்தீன் ஹஸ்மியா என்ற யுவதியும் (வயது19) இவ்வாறு நேற்று (14) கழுத்து வெட்டப்பட்டு வீடொன்றிலிருந்து மீட்கப்பட்டனர்.

சடலமாக மீட்கப்பட்டவர்களின் தந்தை பதுறுத்தீன் (வயது60) என்பவரும் கழுத்து வெட்டப்பட்டு உயிருக்கு போராடிய நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, நேற்றுக் காலை சுமார் 9.30 மணியளவில் சம்பவம் இடம்பெற்ற வீட்டிலிருந்து அலறல் சத்தம் கேட்டபோது, அயலவர்கள் அங்கு ஓடிச்சென்று பார்த்தபோது, வீட்டினுள் இரண்டு பிள்ளைகளும் கழுத்து வெட்டப்பட்டு மரணமான நிலையிலும் பிள்ளைகளின் தந்தை உயிருக்கு போராடியபடி இரத்த வெள்ளத்தில் கிடப்பதைக் கண்டுள்ளனர்.

அது தொடர்பில் பெரியநீலாவணை பொலிஸாருக்கு அறிவித்தபோது, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலீஸார் உயிருக்கு போராடியவரை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்ததுடன் சடலங்களை கல்முனை நீதிமன்ற நீதவான் பார்வையிட்டதன் பின்னர் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

உயிரிழந்த பிள்ளைகளின் தாய் கடந்த 06 மாதங்களுக்கு முன்னர் மரணித்ததாகவும் விஷேட தேவையுடைய இரண்டு பிள்ளைகளையும் தந்தை மிகவும் பாசத்துடன் தனிமையில் பராமரித்து வந்ததாகவும் தெரிவித்துள்ளனர். இருப்பினும் தந்தை, அயலவர்கள் எவருடனும் முரண்பாட்டுகளுடன் வாழ்பவரல்ல எனவும் தனது குடும்பத்தை கண்ணியமாய் பார்த்துக் கொள்பவரெனவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். இச்சம்பவம் தொடர்பில் பெரியநீலாவணை பொலிஸார் தமது விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 'அவளுடைய பலம் நாட்டிற்கு முன்னேற்றம்' கல்முனை வடக்கு மகளிர் தின நிகழ்வுகள்



'அவளுடைய பலம் நாட்டிற்கு முன்னேற்றம்' என்ற தொனிப்பொருளில் 2024ஆம் ஆண்டிற்கான சர்வதேச மகளிர் தினம் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் டி.ஜே அதிசயராஜ் தலைமையில் நடைபெற்றது.கல்முனை பிரதேசசெயலகப்பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு சாதனைகள் புரிந்த பெண்கள் கௌரவிக்கப்பட்டதுடன் பெண் கலைஞர்களின் கலை நிகழ்வுகளும் நிகழ்த்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன. நாவிதன்வெளி பிரதேச செயலாளர் செல்வி. ஆர். ராகுலநாயகி, பிரதம அதிதியாகவும் கௌரவ அதிதியாக வைத்தியர் புஷ்பலதா லோகநாதன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் வசந்தினி யோகேஸ்வரன், மாவட்ட மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் சுரேகா தர்ஷானி எதிரிசிங்க என பலரும் கலந்து கொண்டனர்.

# குடும்பப்பெண் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

**மண்டூர் தினகரன் நிருபர்**

கொக்கட்டிச்சோலை மக்களடி ஊற்று தாந்தாமலை பிரதேசத்தில் குடும்பப்பெண் ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக நேற்று (13) மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மக்களடியுற்று தாந்தாமலை பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான நாகலிங்கம் விஜயரூபி (29) என்பவரே இவ்வாறு பொதுக்கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இரவு நித்திரைக்கு சென்றவரை காணவில்லையென கணவர் தேடிய போதே அவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் உயிரிழந்த பெண் 6 மாத கர்ப்பிணி என தெரியவந்துள்ளது.

சடலம் விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சிறுபோக நெற்செய்கைக்கான

# விதைப்புப் பணிகள் ஏப்ரல் 20 ஆம் திகதிக்குள் நிறைவுசெய்யப்பட வேண்டும்

**ஒலுவில் விசேட நிருபர்**

அக்கரைப்பற்று நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவுக்குட்பட்ட கல்லோயா வலது கரை நீர்ப்பாசனப்பிரிவில் 2024ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கைக்கான விதைப்புப் பணிகள் இம்மாதம் 25ஆம் திகதி ஆரம்பித்து ஏப்ரல் மாதம் 20ஆம் திகதிக்குள் நிறைவு செய்ய வேண்டுமென,அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம தெரிவித்தார்.

அக்கரைப்பற்று பிரதேச கல்லோயா வலது கரை நீர்ப்பாசனப்பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 2023ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கைக்கான ஆரம்பக்கூட்டம் நேற்றுமுன்தினம் (14) அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

அம்பாறை மாவட்டத்தில் கடந்த வெள்ள அனர்த்தத்தினால் சேதமடைந்த விவசாய வீதிகள். கால்வாய்கள், நீர்ப்பாசன குளங்கள் மற்றும் மதகுகள் என்பன திருத்தப்பட்டு வருகிறது. வெள்ள அனர்த்தத்தினால் பாரிய சேதத்தை விவசாயிகள் எதிர்நோக்கினர் . இதனால் விவசாயிகளுக்கு பாரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இம்முறை அம்பாறை மாவட்டத்தில் 01 இலட்சத்தி 35 ஆயிரம் ஏக்கரில் நெற்செய்கை பண்ணப்படவுள்ளதோடு, 10 ஆயிரத்தி 822 ஏக்கரில் கரும்புச் செய்கை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவில் 24 ஆயிரத்தி 10 எக்கரில் நெற்செய்கை பண்ணப்படவுள்ளது.

ஏனைய பிரதேசங்களில் 95 வீதம் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டாலும் அக்கரைப்பற்று பிரதேசத்தில் 100 வீதம் நெற்செய்கை பண்ண முடியும். தற்போது சேனநாயக்கா சமுத்திரத்தில் நீர்மட்டம் சராசரியாக காணப்பட்டாலும் விவசாயிகள் நீர் முகாமைத்துவத்தை பேணி விவசாய செய்கையில் ஈடுபட வேண்டும்.

அம்பாறை மாவட்டத்தில் அதிகமான பிரதேசங்களில் சிறுபோக நெற்செய்கை பண்ணப்படவுள்ளதால் ஒவ்வொரு நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவு தோறும் கட்டம் கட்டமாக நீர் வழங்கப்படும்.

எனவே, விவசாயிகள் தாமதிக்காது குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தமது விதைப்புப் பணிகளை முன்னெடுக்க வேண்டுமென கேட்டுள்ளார்.

# கேள்வி அறிவித்தல்

**சுகாதார சேவைப் பணிப்பாளர் பணியகம் - கொழும்பு மாவட்டம்**

**நவகமுவ மாவட்ட வைத்தியசாலை மின்னல் தாங்கியை பொருத்துதல் – 2024**

எமது கொழும்பு பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை பிரிவிற்குச் சொந்தமான லுனாவ மாவட்ட வைத்தியசாலையின் மின்னல் தாங்கியை பொருத்துவதற்கான பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்வி ஆவணங்களை 2024.03.15 முதல் 2024.03.27 வரை வாரத்தின் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.45 வரை ரூ. 2500/- மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத்தை கொழும்பு பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனைக்குச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

தேவைப்படின் கட்டணம் செலுத்தாமலேயே கேள்வி ஆவணங்களை இவ் அலுவலகத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம். மேலதிக விபரங்களை தொ.பே. இல. 011 2326248 மூலம் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை இரு பிரதிகளுடன் (மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென) வேறுவேறு உறைகளில் இட்டு பொறியிட்டு இவ் அலுவலகத்தின் நிர்வாக அதிகாரியின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். அல்லது பதிவுத் தபாலில் ‘தலைவர், பெறுகைக் குழு, பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை, த.பெ. 1287, புதிய செயலகக் கட்டிடம், மாளிகாவத்த, கொழும்பு -10 என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

கேள்விகள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘மின்னல் தாங்கியைப் பொருத்துதல் - நவகமுவ மாவட்ட வைத்திய சாலை 2024’ என்று குறிப்பிடுதல் வேண்டும்.

கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் 2024.03.28 மு.ப. 10.00 இற்கு முடிவடைவதுடன் அவை திறத்தல் 2024.03.28 மு.ப. 10.00 இற்கு இவ் அலுவலகத்திலேயே இடம் பெறுவதுடன் மேற்படி நேரத்தின் பின்னர் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை,**
**த.பெ. 1287, புதிய செயலகம்,**
**மாளிகாவத்த, கொழும்பு -10.**

# வாகன விற்பனை

| மூன்று சக்கர வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| AAW-6887 | பஜாஜ் | 2015 | ராகம |
| AAP-2725 | பஜாஜ் | 2014 | ராகம |
| AAL-1414 | பியாஜியோ | 2013 | எம்பிலிபிடியா |
| AAC-9124 | பஜாஜ் | 2012 | ராகம |
| YX-2278 | பஜாஜ் | 2012 | நுவரேலியா |
| AAF-7360 | பஜாஜ் | 2012 | சிலாவ் |
| YY-7670 | பஜாஜ் | 2012 | ராகம |
| YV-4000 | பஜாஜ் | 2011 | ராகம |
| YR-8429 | பஜாஜ் | 2011 | ராகம |
| YA-9438 | பஜாஜ் | 2010 | குருநாகல் |
| QV-7451 | பஜாஜ் | 2009 | ராகம |
| QN-9415 | பஜாஜ் | 2008 | மாதரா |
| QJ-2780 | பஜாஜ் | 2007 | ராகம |
| QM-7645 | பஜாஜ் | 2007 | ராகம |
| QF-3416 | பஜாஜ் | 2006 | ராகம |
| QB-4793 | பஜாஜ் | 2005 | ராகம |

| மோட்டார் வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| CBC-7212 | சுசுகி | 2017 | ராகம |
| CAO-2963 | சுசுகி | 2014 | ராகம |
| KK-9212 | செவ்ரோலெட் | 2010 | ராகம |
| JU-3449 | டாடா | 2005 | ராகம |
| 18-7435 | மிட்சுபிஷி | 1994 | ராகம |
| 18-8300 | டொயோட்டா | 1991 | ராகம |
| 302-0866 | நிசான் | 1998 | ராகம |

| மோட்டார லாரி | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| LB-5294 | CHANGAN | 2006 | ராகம |

| ஒற்றை வண்டி | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| DAB-3318 | மஹிந்திரா | 2015 | ராகம |

மேற்கண்ட வாகனங்களை யார்டுகளிலும் சோதனை செய்யலாம் அது ஏல அடிப்படையில் இருக்கும்

| | |
|---|---|
| ராகம 0778 523 285 | திருகோணமலை 0773 382 612 |
| ரத்தினபுரி 0774 857 351 | கண்டி 0773 972 860 |
| நுவரெலியா 0777 717 562 | அனுராதபுரம் 0767 139 916 |
| அம்பாரா 0773 547 556 | குருநாகல் 0764 425 205 |
| எம்பிலிபிட்டிய 0773 610 188 | பாணடுரா 0775 215 263 |
| மாத்தறை 0743 601 121 | சிலாவ் 0770 288 804 |

# பெறுகை அறிவித்தல்

## வெலிகம பிரதேச சபை

வெலிகம பிரதேச சபைக்குரித்தான பதிவு இரத்துச் செய்யப்பட்டுள்ள ∴பார்மெக் வகையான பெக்கோ லோடரை கழிவுப்பொருளாக ஏலமிடல்

**கேள்வி விபரங்கள்**

| | |
|---|---|
| கேள்விப் படிவங்கள் வழங்குதல் | - 2024-03-18ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2024-04-08ஆம் திகதி பி.ப. 1.30 மணி வரை |
| கேள்விப் படிவங்களை ஏற்றுக்கொள்ளல் | - 2024-03-18ஆம் திகதி மு.ப. 9.30 மணி முதல் 2024-04-08ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை |
| கேள்விப்படிவங்கள் திறக்கப்படுதல் | - 2024-04-08ஆம் திகதி பி.ப. 2.15 மணிக்கு வெலிகம பிரதேச சபை அலுவலகத்தின் முதலாம் மாடியில் |

1. கேள்விப் விண்ணப்பப் படிவங்களை மீளளிக்கப்படாத 5000.00 பிணை வைப்பை அலுவலகத்திற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். கேள்விப் படிவத்தைப் பெற்றுக்கொண்ட அதை நிராகரித்தால் கேள்விப் பிணைத் தொகை சபைக்குரித்தாக்கப்படும்.
2. கேள்விப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளும்போது 500.00 ரூபா மீளளிக்கப்படாத தொகையை பிரதேச சபைக்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
3. கேள்விப் படிவங்களின் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை வெவ்வேறான இரு உறைகளில் இட்டு அந்த மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி கடித உறைகளை வேறொரு உறையில் இட்டு 2024-04-08ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள 1ஆம் இலக்க பெறுகைப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். அல்லாவிடில் செயலாளர், வெலிகம பிரதேச சபை, பெலென, வெலிகம எனும் பெயருக்கு மற்றும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2024-04-08ஆம் திகதிக்கு முன் கிடைக்கும் வகையில் அனுப்பலாம்.
4. கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
5. கேள்விப் படிவங்களுடன் வழங்கப்படும் கேள்வி நிபந்தனைகளுக்கு இணங்குவதாக அந்த நிபந்தனை படிவத்தில் கையொப்பமிட்டு கேள்விப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையான காலத்தினுள் அனுமதியைப் பெற்று விடயப்பொறுப்பு அலுவலரின் உதவியுடன் வாகனத்தைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. கேள்வியில் தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர் உரிய தொகையை ஒரே முறையில் செலுத்தி இயந்திரத்தை அலுவலக இடப்பரப்பிலிருந்து அப்புறப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.
8. அலுவலக நேரத்தில் 0412254287 எனும் தொலைபேசி இலக்கத்தில் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
9. கேள்விக்கான குறைந்தபட்ச இரகசிய விலையொன்று உள்ளதென்பதுடன் அது பகிரங்கப்படுத்தப்படமாட்டாது. அத்தொகைக்குக் குறைவான கேள்விகள் நிராகரிக்கப்படும். அதிகூடிய விலையைச் சமர்ப்பித்துள்ள கேள்விதாரர் தெரிவு செய்யப்படுவார்.
10. கேள்வி விலைகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல் என்பவற்றை வெலிகம பிரதேச சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**செயலாளர்,**
**வெலிகம பிரதேச சபை.**
**2024-03-13ஆம் திகதி**
**வெலிகம பிரதேச சபையில்.**

**1990 ஆம் ஆண்டின் 4-ம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9-ம் பிரிவின் கீழ் நடைபெறும் ஏலவிற்பனை**

## கார்கிள்ஸ் வங்கி லிமிட்டட்

## பிரசித்த ஏலவிற்பனை

க்ளெட்வின் அந்தோனி டென்சில் லூட்வைக் என்பவர் கடப்பாடுடையவராகவும்/ஈடுவைத்தவராகவும் மற்றும் இனேஷா கௌமுடி லூட்விக் என்பவர் கடப்பாடுடையவராகவும் PB 4847 என்ற பதிவு இலக்கத்தைத் தாங்கி கார்கிள்ஸ் வங்கி லிமிட்டட் சார்பாக பிரசித்த நொத்தாரிசு ஏ.சி. நதீஷாவினால் 2018.08.06 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட 433, 435 மற்றும் 438 ஆகிய முறிகளின் மீது பெறப்பட்ட கடன் மீதான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்களாதலால்,

2024ஆம் ஆண்டு ஏபரல் மாதம் 8ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள காணி அமைந்திருக்கும் இடத்திலேயே கார்கிள்ஸ் வங்கி லிமிட்டட்டினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்கப்படும்.

மேற்படி ஏலவிற்பனையானது, சுகாதார அமைச்சின் கோவிட் 19 சம்பந்தமாக விடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கும் வழிகாட்டலுக்கும் அமையவே நடாத்தப்படும்.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், சல்பிற்றி கோறளவின் பள்ளே பற்றுவில் தெஹிவளை செயலாளர் பிரிவு மற்றும் தெஹிவளை-கல்கிசை மாநகர சபை எல்லைக்குள் துடுகெமுனு வீதி, 537A, ஆம் இலக்க கிராம சேவகர் பிரிவிற்குள் களுபோவிலவில் அமைந்துள்ள சர்ச் வீதி 15(பகுதி) வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட மீகஹாவத்த என்றும் எரகடேவத்த என்றும் அழைக்கப்படும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். விக்ரமசிங்ஹவினால் வரையப்பட்ட 2005 ஜூலை 27ஆந் திகதிய 3495/9000ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள லொட் Y என்ற காணி மற்றும் கட்டிடங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாம். இருபத்து நான்கு தசம் ஏழு பூச்சியம் பேர்ச்சஸ் (ஏ0.றூ.பே.24.70) விஸ்தீரணமானது. இது தெல்கந்த பதிவுக் காரியாலயத்தில் F227/89 இன் கீழ் பதிவு செய்யப்பட்டது. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், சல்பிற்றி கோறளவின் பள்ளே பற்றுவில் தெஹிவளை செயலாளர் பிரிவு மற்றும் தெஹிவளை-கல்கிசை மாநகர சபை எல்லைக்குள் துடுகெமுனு வீதி, 537A, ஆம் இலக்க கிராம சேவகர் பிரிவிற்குள் களுபோவிலவில் அமைந்துள்ள சர்ச் வீதி 15(பகுதி) வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட மீகஹாவத்த என்றும் எரகடேவத்த என்றும் தற்போது சனி சைட் என்றும் அழைக்கப்படும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் எல்.சி.பீ. ராஜபக்ஷவினால் வரையப்பட்ட 2005 ஜூன் 15ஆந் திகதிய 1030ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள உடனானதும் மேலானதுமான பாதையை உபயோகிக்கும் உரிமையுடன் கூடிய லொட் A4 (6 மீற்றர் அகலமான பாதைக்கான ஒதுக்கீடு) என்ற காணித்துண்டு பன்னிரண்டு தசம் ஒன்பது இரண்டு பேர்ச்சஸ் (ஏ0.றூ.0பே.12.92) விஸ்தீரணமானது. இது தெல்கந்த பதிவுக் காரியாலயத்தில் M2460/257 இன் கீழ் பதிவு செய்யப்பட்டது. அத்தோடு,

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், சல்பிற்றி கோறளவின் பள்ளே பற்றுவில் தெஹிவளை செயலாளர் பிரிவு மற்றும் தெஹிவளை-கல்கிசை மாநகர சபை எல்லைக்குள் துடுகெமுனு வீதி, 537A, ஆம் இலக்க கிராம சேவகர் பிரிவிற்குள் களுபோவிலவில் அமைந்துள்ள மீகஹாவத்த என்றும் எரகடேவத்த என்றும் அழைக்கப்படும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். ராஜேந்திரவினால் வரையப்பட்ட 1965 ஒக்டோபர் 22ஆந் திகதிய 3134ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள லொட் 4 என்ற காணி ஒன்பது பேர்ச்சஸ் (ஏ0.றூ.0பே.9.) விஸ்தீரணமானது. அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 3134 மற்றும் M 2802/177 இன் கீழ் தெல்கந்த பதிவுக் காரியாலயத்தில் பதிவு செய்யப்பட்டது.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி:-** கொழும்பு நகரத்தில் இருந்து கொழும்பு-ஹொரண வீதியினூடாக கொஹுவலைக்குச் சென்று இடதுக்குத் திரும்பி எஸ்.டீ.எஸ். ஜயசிங்க ஒழுங்கை (முன்னர் சர்ச் வீதி) 200 மீற்றர் அளவு தூரம் சென்று இடதுக்குத் திரும்பியவுடனேயே வரும் சேஜிஸ் கெம்பஸ் வீதி இக் குறிப்பிட்ட காணிக்குச் செல்லும். இக்குறிப்பிடப்பட்ட காணியானது எஸ்.டீ.எஸ். ஜயசிங்க ஒழுங்கையிலிருந்து வலது பக்கத்தால் சுமார் 100 மீற்றர் தூரத்தில் உள்ளது. அத்தோடு, ஹைலெவல் வீதியினால் நுகேகொட சந்தியை அடைந்து அங்கிருந்து வலது பக்கத்துக்குத் திரும்பி எஸ். டீ. எஸ். ஜயசிங்க ஒழுங்கைக்கு சென்று அதிலிருந்து சுமார் 350 மீற்றர் தூரத்தில் இக்குறிப்பிட்ட காணி தென்படும். இவ்வாறும் இக் காணியை அடையலாம்.

**தீர்மான முடிவு அறிவித்தல்கள்:** 2019.10.11 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியையும் 2019.10.11 ஆந் திகதிய திவயின, த ஐலண்ட் மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்:-** உத்தேச கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 10%
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1%
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5% கொள்வனவு விலையின் (இரண்டரை வீதம்) அதற்கு மேலாக ஏற்புடைத்தான வரிகள்
(4) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1000/-
(6) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம்

மிகுதி 90% வீதத்தையும், இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகாரசபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு, ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்துதல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து, ஏற்கனவே செலுத்திய கொள்வனவு விலையின் 10% பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏலவிற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள தயவு செய்து கொழும்பு - 3, காலி வீதி, இலக்கம் 696 இலுள்ள கார்கிள்ஸ் வங்கி லிமிட்டட்டின் அறவீட்டு தலைமையகத்தைத் தொடர்பு கொள்ளவும். (தொ.பே. 011-7640450)

**சந்திமா பிரியதர்ஷனீ கமகே,**
**நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பீட்டாளர் மற்றும்**
**உரிமம் பெற்ற ஏலதாரர்.**

**இல. 9-i, ஹைலெவல் வீதி,**
**சர்வோதய மாவத்த, பனாகொட, ஹோமாகம.**
**தொலைபேசி இலக்கம்: 011- 2173282, 071 4318252**

**மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்**

**1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம் - பிரிவு 55**

புத்தளம் மாவட்டத்தின் வென்னப்புவ பிரதேச செயலாளர் பிரிவில் சிந்தாத்திரிய எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 410018 பிரிவு இல. 02 தாள் இல. 01, துண்டு இல. 04 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த இல. 416 சிந்தாத்திரிய வாய்க்கால எனும் விலாசத்தைக் கொண்ட பெர்ணான்டோ வர்ணகுலசூரிய மார்ட்டின் அநுர என்பவர் 13.08.2018 ஆந் திகதி மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் மாரவில வீதி, நாத்தாண்டிய என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு 2024.03.29 ஆந் திகதிக்கு முன்னர் சமுகம்தரவும்

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

**மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்**

**1998ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம் பிரிவு 55**

களுத்துறை மாவட்டத்தின் களுத்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 530014 எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 03 பிரிவு இல.01 தாள் இல.242 துண்டு இல. ..... ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த “பிரசன்ன பெரிய பன்சலை வீதி, பொஹத்தரமுள்ள, வாதுவை எனும் விலாசத்தைக் கொண்ட கருணாமுனி விலியம் டன்ஸ்டன் த சில்வா என்பவர் 2019.04.17ஆந் திகதி மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் 2ம் மாடி, மாவட்டம் செயலாளர் காரியாலயம் களுத்துறை - தெற்கு என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்துக்கு 2024.04.15 ஆந் திகதிக்கு முன்னர் சமுகம்தரவும்.

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

# புளத்சிங்கள பிரதேச சபை

## பெறுகை அறிவித்தல்

புளத்சிங்கள பிரதேச சபைக்குச் சொந்தமான LE-7513 இலக்கம் கொண்ட சிங்கிள் கெப் வாகனத்தை பழுதுபார்ப்பதற்காக 2024.03.15 முதல் 2024.04.01 வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. பிரதேச சபை கேட்போர் கூட கராஜில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனத்தைப் பரீட்சித்து உங்களது விலைமனுக்களை 2024.04.01ம் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்: 034-2282175

**செயலாளர் மற்றும் புளத்சிங்கள பிரதேச சபையின் அதிகார செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**
**பிரதேச சபை,**
**புளத்சிங்கள.**

# இலங்கை முதலீட்டுச் சபை

## பெறுகை அறிவித்தல்

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பெறுகைக்காக விலைமனு கோரல் அறிவித்தல் 2024 மார்ச் 15 ஆம் திகதி ‘Daily News’ பத்திரிகை மற்றும் இலங்கை முதலீட்டுச் சபை உத்தியோகபூர்வ இணையதளத்தில் (www.investsrilanka.com) வெளியிடப்பட்டுள்ளது.

**INVITATION FOR BIDS FOR PROCUREMENT OF SECURITY SERVICES FOR THE BOARD OF INVESTMENT OF SRI LANKA FOR A PERIOD OF TWO YEARS (2024/25 - 2025/26)**

**Contract no.- BOI /S&S/ Q/ 033/ 2024 & BOI/ S&S/ Q/ 039/ 2024**

இந்த பெறுகைக்காக குறித்த கேள்விமனு ஆவணங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டிருப்பதோடு விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற சேவை வழங்குநர்கள் ‘Daily News’ பத்திரிகை மற்றும் இலங்கை முதலீட்டு சபை உத்தியோகபூர்வ இணையதளத்தில் (www.investsrilanka.com) குறித்த அறிவித்தலுக்கு அமைய செயற்படும்படி இத்தால் அறியத்தருகிறோம். மேலதிக விபரங்களுக்கு, சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) தொலைபேசி இலக்கம் 011 2543041/ 074 1531432 இன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்**
**இலங்கை முதலீட்டுச் சபை**

# afc தங்கக் கடன் சேவை

## தங்க நகை ஏல விற்பனை

அலையன்ஸ் ∴பைனான்ஸ் நிறுவனத்தின் பின்வரும் கிளைகளில், அடமானம் வைக்கப்பட்டுள்ள 31.12.2023 அன்று முதிர்ச்சியடைந்த இதுவரை மீட்கப்படாத தங்கப் பொருட்கள், பின்வரும் தேதிகளில் காலை 09:30 முதல் கீழ்க்கண்ட இடங்களில் பொது ஏலம் மூலம் விற்கப்படும்.

**தங்கக் கடன் சேவை நிலையங்கள்**

| தேதி | கிளை | இடம் |
|---|---|---|
| 21-03-2024 | சங்கானை, கிளிநொச்சி, மட்டக்களப்பு, தம்புள்ளை குருநாகல், திருகோணமலை, பாசறை பொகவந்தலாவ, கம்பளை, பலாங்கொடை களுத்துறை, அக்குரஸ்ஸ, பொரளை சுப்பர், கிரிபத்கொட கொஹுவல, கல்கமுவ, புத்தளம், புத்தளம் 2, ஜா-எல, பூகொட | தனித்தனியாக அவர்களது சொந்த கிளை வளாகத்தில் ஏலம் நடத்தப்படும். |
| 22-03-2024 | சாவகச்சேரி, குருமன்காடு, பராக்கிரமபுர கதுருவெல, களுவாஞ்சிகுடி, கலேவெல திருகோணமலை-2, பதுளை, ஹட்டன், எம்பிலிபிட்டிய, பாணந்துறை, மாத்தறை, கம்பஹா, வார்டு இடம், மாலபே, கல்பிட்டி, நீர்கொழும்பு | |
| 25-03-2024 | சுன்னாகம், பருத்தித்துறை, வவுனியா, ஹிங்குராங்கொடை, நுவரெலியா, வெலிமடை, தலவாக்கலே, அதுருகிரிய, பிலியந்தலை, அளுத்கம, அம்பலாந்தோட்டை, கணேமுல்ல, ஹோமாகம, இரத்தினபுரி, சிலாபம், குளியாபிட்டிய, கேகாலை | |
| 26-03-2024 | யாழ்ப்பாணம், திருநெல்வேலி, புதுக்குடியிருப்பு, தெஹியத்தகண்டி அனுராதபுரம், அம்பாறை, மாத்தளை, ராகலை, அவிசாவளை, அம்பலாங்கொட, கடவத்தை, களனி, நிக்கவெரட்டிய, உடப்புவ, கிரிந்திவெல | |
| 27-03-2024 | யாழ்ப்பாண நகரக் கிளை, மன்னார், முலங்காவில் மஹியங்கனை, மதவாச்சி, மொனராகலை, வெல்லவாய, நாவலப்பிட்டி, ரிகில்லகஸ்கட, ஹொரண, தெனியாய, காலி, கடுவெல, மஹரகம, வென்னப்புவ, நிட்டம்புவ | |

ஏலத்தில் பங்கேற்கும் அனைவரும் தங்களின் தேசிய அடையாள அட்டையை கொண்டு வர வேண்டும் மற்றும் நிறுவனத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும் எலாயன்ஸ் ∴பினான்ஸ் கோ. பி.எல்.சி க்கு எந்தவித அறிவிப்பும் இல்லாமல் ஏலங்களை ரத்து செய்ய, ஒத்திவைக்க அல்லது ஒன்றிணைக்க உரிமை உள்ளது.

65 1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி பி.எல்.சி
செயபாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

**அடகுச் சேவைத் தலைவர்**
**எலாயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ**
**722, கோட்டை வீதி இராஜகிரிய**
**தொலை : 0115 573600**

Sunday Observer adz it's what you want
தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

**Promotional Rates for a Classified Advertisements** (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,000/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,330/- |

**Hand over your Classified Advertisements to Our nearest Branch Office**

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# விலைமனுக்கோரல் (IFB)

## கொட்டதெனியாவ அஸ்போல்ட் ஆலைக்கான போக்குவரத்து வசதியினை வழங்குதல்

| விபரம் | டம்ப் டிரக்குகளின் எண்ணிக்கை (டிப்பர்கள்) |
|---|---|
| கொட்டதெனியாவ அஸ்போல்ட் ஆலைக்கான போக்குவரத்து வசதியினை வழங்குதல் | 07 (15 டன்) |

கொட்டதெனியாவ அஸ்போல்ட் ஆலைக்கான போக்குவரத்து வசதியினை வழங்குவதற்காக தேசிய போட்டி ஏல நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.03.18** ஆம் திகதி முதல் **2024.04.05** ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையத்தளத்தை **www.rda.gov.lk** பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி இலக்கம் : **011-2884790** ஊடாக **வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளரை (பெறுகைப் பிரிவு)** தொடர்பு கொள்ள முடியும். மின்னஞ்சல் முகவரி : **procurement@rda.gov.lk**

**தலைவர்,**
**வீ.அ.அ.ச கொள்முதல் குழு,**
**வீதி அபிவிவிருத்தி அதிகார சபை,**
**முதலாம் மாடி, இல.216 'மகநெகும மஹமெதுர'**
**இல-216, டென்சில் கொபேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை,**
**பத்தரமுல்லை.**

SELACINE



Wherever you are..,
The best way to Fulfil your Future Dreams...
Gather with,
SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Green Light for Online Transfer
Lake House Branch Acc. No. 000000377
E-mail - classified@lakehouse.lk
077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347
011 2 429 383 | 011 2 429 342/ 343


# தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையில் வெற்றிடங்கள்

## கல்வியமைச்சு

NLSL

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையில் கீழ்க்காணும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவி | வெற்றிட எண்ணிக்கை | சம்பளக் குறியீடு |
|---|---|---|---|
| 01 | விற்பனை மேம்பாட்டு அதிகாரி | 01 | JM -1-1 |
| 02 | நூலக அபிவிருத்தி உதவியாளர் | 05 | MA 3 |
| 03 | தகவல் தொழில் நுட்ப உதவியாளர் | 01 | MA 2-1 |
| 04 | தகவல் உதவியாளர் | 03 | MA 2-1 |
| 05 | முகாமைத்துவ உதவியாளர் | 08 | MA 1-1 |

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு சம்பந்தப்பட்ட தகைமைகள் மற்றும் விண்ணப்பத்தை தேசிய நூலக ஆவணங்கள் சேவை சபையின் இணையதளமான www.natlib.lk இற்கு பிரவேசித்து பெற்றுக் கொள்ள முடிவதுடன் குறித்தவாறு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024.03.28ம் திகதிக்கு முன்பு தலைவர் தேசிய நூலக ஆவணவாக்கல் சபை இல. 14, நிதஹஸ் மாவத்த, கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுவதுடன் அரச/அரசசார்பு நியதிகள் சபைகளில் கடமையாற்றக் கூடிய விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் தமது திணைக்கள/ நிறுவன தலைமையின் பரிந்துரையுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலே தரப்பட்டுள்ள சகல தேவைப்பாடுகளும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை,**
**இல. 14, நிதஹஸ் மாவத்த, கொழும்பு -07.**
**www.natlib.lk**

2024.03.15

# INVITATION FOR BIDS (IFB)

## DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE

## VAVUNIYA SOUTH SINHALA PRADESHIYA SABHA

## LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a grant from the European Union towards the cost of Local Development Support Project, and intends to apply part of the proceeds of this grant to payments under the Contract for Work as described below.
2. The Chairman, Provincial Project Procurement Committee (PPPC) on behalf of the Vavuniya South Sinhala Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for the work as described below.

| No. | Contract No. | Contract Name | Employer's Estimated Cost (Rs. Mn) | CIDA Grade & Specialty | Contract Period (Days) | Bid Security Amount (Rs.) | Bid Validity Period up to | Bid Security Validity Period up to |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/VAV/VSSPS/2024/PT3/01 | Construction of Sales Outlets at Iratperiyakulam | 24.53 | C6 or above Building Constructions | 147 | 370,000.00 | 19 June 2024 | 17 Jul 2024 |

3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty and grade as stated above with the Construction Industry Development Authority (CIDA).
5. Qualification requirements to qualify for contract award are included in Section 5 (Bidding Data and Contract Data) in the Bidding Document.
6. Interested bidders may obtain further information from **Secretary, Vavuniya South Sinhala Pradeshiya Sabha, A9 Road, Iratperiyakulam, Vavuniya (T.P No: 0242221427, Fax No: 0242221427)** and inspect the bidding documents at **Vavuniya South Sinhala Pradeshiya Sabha, A9 Road, Iratperiyakulam, Vavuniya** from **15-Mar-2024** until **3-Apr-2024** between **09:00 Hrs and 15:00 Hrs** on normal working days.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Vavuniya South Sinhala Pradeshiya Sabha, A9 Road, Iratperiyakulam, Vavuniya** from **15-Mar-2024** until **3-Apr-2024** between **09:00 Hrs and 15:00 Hrs** on normal working days upon payment of a non-refundable fee of **Rs.7,500.00.** The method of payment will be **by cash.**
8. Bids shall be delivered in duplicate to **Chairman, Provincial Project Procurement Committee (PPPC), Local Development Support Project (LDSP), Department of Local Government (NP), Elders' Home Complex, Kaithady** at or before **14.00 Hrs on 4-Apr-2024**. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9. All bids shall be accompanied by a Bid Security as stated in the Table above.

**Chairman,**
**Provincial Project Procurement Committee (PPPC),**
**Local Development Support Project (LDSP),**
**Department of Local Government (NP),**
**Elders' Home Complex,**
**Kaithady.**

15-Mar-2024

**Repeat Your Ad For Better Offers**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் அலுவலகம், திருகோணமலை
## மருத்துவ / அலுவலக உபகரணங்களை வழங்குதல்

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் பின்வரும் ''மருத்துவ / அலுவலக உபகரணங்கள் - 2024'' என்பவற்றை வழங்கி நிறுவுவதற்காக 2024-04-08ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை முதன்மையாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற முகவர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கிறார்.

**மருத்துவ மற்றும் அலுவலக உபகரணங்கள் - 2024**

| உருப்படி இல. | உருப்படிகள் | விபரங்கள் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாதது |
|---|---|---|---|---|
| Group I | 1.1 | Spinal Board | 2 | 3,500.00 |
| | 1.2 | Infusion Pump | 4 | |
| | 1.3 | Syringe pump | 4 | |
| | 1.4 | ECG Machine | 8 | |
| | 1.5 | Ambubag adult | 3 | |
| | 1.6 | Double chamber suction operator | 2 | |
| | 1.7 | Diagnostic set | 3 | |
| Group II | 2.1 | Spot Lamp | 10 | 3,500.00 |
